போர் வெறியோடு புறப்பட்டவனை

தர்ம நெறி நிற்கப் பணித்த தேசம்

# கலிங்கம்


போர்-01 பரணி - 10

பல்சுவை இதழ்




ISSN - 2279 - 1868
9772279186008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்திடாத வீரம்
மண்டியிடாத மானம்

# கலிங்கம்

போர் - 01 பரணி - 10

265B, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**ஆசிரியர் குழு** -
செ.கமலக்கண்ணன்
வ.பார்த்திபன்
ர.தர்மினி

**ஆலோசகர்** -
தி.நடனசபேசன்

**அலுவலக தொடர்பாளர்** -
இ.றிஸ்வான்

**அலுவலக உதவி** -
சூ.சிந்துஜா
ப.துசாந்
ப.குவானியன்

**ஓவியக்கலை** -
எஸ்.சந்திரசேகர்

**கணனி வரைகலை** -
தாயகம் டிஜிற்றல்,
யாழ்.பல்கலைக்கழகம் அருகில்

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே

**தொடர்புகளுக்கு**

C 0772297265
E kalingaminfo@gmail.com
T 021 3200 644
F yarlaid

**சந்தா தொடர்பான விபரங்கள்**

(ஓர் ஆண்டுக்குரியது, தபால் செலவு உட்பட)


| | |
|---|---|
| இலங்கை | 600 ரூபா |
| இந்தியா | 750 ரூபா |
| கனடா | 45 கனடியன் டொலர் |
| இங்கிலாந்து | 35 பவுண்ஸ் |
| அவுஸ்ரேலியா | 45 அவுஸ்ரேலிய டொலர் |
| ஐரோப்பா | 40 யூரோ |
| ஏனையவை | 45 டொலர் |

## உள்ளே ...


38 கல்வி எங்கள் மூலதனம்



50 ஆப்கானிஸ்தான்



16 மார்க்சியம்





ஒன்று மட்டும் உறுதி!
மலையின் நதிகளெல்லாம்
சமுத்திரத்தை நோக்கி!
மானுட நதிகளெல்லாம்
மார்க்ஸை நோக்கி!

56 பான்கார்ஹ் கோட்டை



06 மரணவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிங்கம் வாசகர்களின் பேராதரவுடன் யாழ். ஏய்ட் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் தாயக விடுதலைக்காய் இறுதிவரை களமாடிய முன்னாள் போராளிகளுக்கான சுயதொழில் மற்றும் வாழ்வியல் மேம்படுத்தல் செயற்றிட்டம்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








எமக்காய் நம் தேசத்துக்காய்
தம்மை அர்பணித்தவர்களுக்கு
நாமும் அர்ப்பணிபுடன் அவர்களின்
முன்னேற்றத்திற்கு செயலாற்றுவோம்
அதற்கு பெரும் ஆதரவு வழங்கும்
எமது வாசகர்களுக்கு நன்றி

## சிறுவர்களின் மகிழ்ச்சிக்கான செயற்றிட்டம்





## மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான செயற்றிட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிடம் இருந்து...



# மாற்றம் ஒன்றே விடிவுதரும்

நாங்கள் வாழும் இச் சமூக ஒழுங்கில் சாவல்களையும் நெருக்கடிகளையும் சந்திப்பது ஒரு சாதாரண விடயம். ஆனால் அச்சாவல்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நாம் பயணிக்கும் திசையறிந்து பயணிப்பதே கடினமான விடயம். அந்த வகையில் அக் கடினமான விடயத்தினையும் சாத்தியமாக்கியே கலிங்கத்தின் பத்தாவது இதழ் வெளிவந்துள்ளது.

கலிங்கம் இதழ் மூலம் கிடைக்கும் வருமானத்தினை கற்றலைத் தொடர இடர்படும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக வழங்கி வருகின்றோம் என்பது யாவரும் அறிந்த விடயம். ஆனால் சென்ற முறை நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக உதவிய அதே சமயம் சுயநலம் பாராமல் எமது இனம் சுதந்திர காற்றை சுவாசிக்க வேண்டும் என்ற ஒரே ஒரு இலட்சியத்திற்காக தங்கள் வாழ்வினை எமக்காக அர்பணித்து போராடி எமது இனத்திற்கு என்று ஒரு முகவரியினை தந்து விட்டு தற்போது தங்கள் முகவரியினைத் தொலைத்து விட்டு இடர்படுகின்ற முன்னாள் போராளிகளின் வாழ்வியலினை மேம்படுத்தவும் உதவியுள்ளோம். இக்காலக்கடமை உங்களின் பங்களிப்புடன் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்

எமது தேசத்தின் புயல்களாக சுழன்றடித்தவர்கள் இன்று சுமார் 7 வருடங்களுக்கு மேலாக ஒரு சக்கர நாற்காலியில் இந்த தேசத்தில் யாருமே அறியாத மூலைமுடுக்குகளில் தங்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்த இடர்படுகின்றனர். நாம் ஆடம்பரங்களுக்காகவும் எங்களுடைய சுகபோகங்களுக்காகவும் எவ்வளவோ நிதியினை செலவு செய்கின்றோம். அதே நேரத்தில் இப்படிப்பட்டவர்களின் வாழ்வியலை மேம்படுத்த நாம் அனைவரும் முன்வராமை அல்லது முன்வர தயங்குவதன் காரணமாக வறுமையின் கொடுமை தாங்காமல் தற்கொலை என்கின்ற வாழ்வின் கடைசி முடிவை அவர்கள் எடுப்பதற்கு காரணகர்த்தாக்கள் ஆகின்றோம். ஆம் இரண்டு பிள்ளைகளின் தந்தையான யோதிலிங்கம் துசான் கடந்த சில மாதங்களுக்கு முன் தற்கொலை செய்து கொண்டார்.

எமது இனத்தின் இருப்புக்காக எம் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட சுதந்திர வாழ்வுக்காக தங்களை தற்கொடையாக்கியவர்கள் இன்று தற்கொலை என்கின்ற நிலைக்கு எம்மால் தள்ளப்பட்டுள்ளனர் என்பது மறுதலிக்க முடியாத உண்மை. எனவே இவ்வாறன சம்பவங்கள் இனியும் நடைபெறாத வண்ணம் நாம் ஒவ்வொருவரும் அவர்களின் வாழ்வியலுக்கு உதவ வேண்டும் என்ற மாற்றம் உருவாகவேண்டும்.

அடுத்து நீண்ட பல வருடங்கலாக கரை புரண்டுபோயுள்ள எமது அரசியல் தீர்வு தொடர்பானது

**“நிலையான தீர்வுமின்றி இடைக்காலத் தீர்வுமின்றி ஒரு அரசியல் வெறுமைக்குள் நாம் தொடர்ந்தும் சிறைபட்டு இருக்க முடியாது”** என்று உரைத்த ஒரு விடுதலை வீரனின் வரிகள் எம் நினைவுக்கு வருகின்றன. நாம் எமது இனப்பிரச்சினைக்கு எது தீர்வு என்று தெரியா!ல் சூனியமான அரசியல் இருட்டுக்குள் தொடர்ந்தும் பயணிக்கின்றோம். இந்த இருட்டுக்குள் ஒரு ஒளிக் கீற்றாகவே அல்லது ஒரு தொடக்க புள்ளியாகவே தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடுகள் அமைகின்றது. இத்தனை வருடகால எமது உரிமைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டத்தின் வலிமையுடனும் மக்களின் பேராதரவுடனும் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது அதன் பிற்பாட்டு தற்போது தான் எமது பிரச்சனைக்கு என்று ஒரு அரசியல் தீர்வினை தமிழ் மக்கள் பேரவை முன்வைத்தது அதனைத் தொடர்ந்து தற்போது வடக்கு மாகாண சபையும் ஒரு தீர்வு திட்டத்தை முன்மொழிந்துள்ளது.

முன்மொழியப்பட்ட தீர்வுத்திட்டங்களில் பலரின் அபிப்பிரயங்களைப் பெற்றுக்கொண்டு திருத்தம் செய்வது, தீர்வு திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பது அத்துடன் தெற்கில் எழும் சிங்களப் பேரினவாதிகளின் கூச்சலுக்கு மத்தியில் அத் தீர்வினை எவ்வாறு அடைவது போன்ற பல சவால்களும் நெருக்கடிகளும் தமிழ்த்தேசிய தலைமைகளிடம் இருக்கத்தான் செய்கின்றது ஆனால் ஒற்றுமையின் பலத்தால் எதையும் சாதிக்கலாம் எச்சவால்களையும் சாதனைகள் ஆக்கலாம் யார் வாழ்வியலையும் மாற்றலாம் என்று மக்கள் மனங்களில் மட்டும் அல்ல தமிழ் தேசியத் தலைமைகளின் மனங்களிலும் ஏற்படும் மாற்றமே எமது அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை கற்றுத் தரும் பாடம்

**காட்டில்** வாழுகின்ற மிருகங்களுக்கு இடையில் சிறந்த ஆணழகனைத் தெரிவு செய்வதற்காக ஒரு ஆணழகன் போட்டி நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொரு மிருகங்களும் ஆணழகன் போட்டியில் வெற்றிபெறுவதற்கு கடுமையான பயிற்சிகளினை மேற்கொண்டன. அவ் ஆணழகன் போட்டியில் முள்ளம் பன்றியும் கலந்து கொள்ள தீர்மானித்தது ஆனால் மிருகங்களில் முயல் மென்மையானது இதனால் ஏனைய மிருகங்கள் தடவிப் பார்க்கின்றன ஆகவே ஒரு வேளை முயல் வெற்றி பெற்று விடுமோ என்ற பயம் முள்ளம் பன்றியை தொற்றிக் கொண்டது. அதனால் முள்ளம் பன்றி தனது உடலில் காணப்பட்ட முள்ளுகள் அனைத்தையும் பல்வேறு வழிகளில் அகற்றிக் கொண்டது.

போட்டிக்கான நாளும் வந்தது. மண்டபத்திற்கு வெளியே அனைத்து மிருகங்களும் நின்றன. போட்டியாளர்கள் ஒவ்வொரு மிருகமாக அழைக்க அழைக்க மண்டப வாசலில் நிற்கும் காவலாளி குறித்த மிருகத்தினை மண்டபத்தினுள் போட்டிக்கு அனுமதிப்பார். முதலில் சிங்கத்தினை அழைத்தனர் . காவலாளி சிங்கத்தினை உள்ளே அனுமதித்தார். இவ்வாறு ஒவ்வொரு மிருகங்களாக போட்டிக்கு சென்றன. முள்ளம் பன்றியின் பெயர் கூப்பிடப்பட்டது. முள்ளம் பன்றி மண்டப வாசலிற்கு சென்றது. ஆனால் வாசலில் நின்ற காவலாளி ஏய் முள்ளம் பன்றியியை கூப்பிடுகின்றார்கள் நீ வந்து நிற்கின்றாய் என்றார். அதற்கு முள்ளம் பன்றி நான் தான் முள்ளம் பன்றி என்றது. எனக்கு முள்ளம் பன்றியை தெரியாதா? நீ முள்ளம் பன்றியில்லை எனவே நீ போட்டியில் கலந்து கொள்ள முடியாது என்று முள்ளம் பன்றியினை துரத்தியடித்தான். முள்ளம் பன்றி தனது அடையாளத்தினை இழந்ததன் காரணமாக போட் டியில் கூட கலந்து கொள்ளமுடியாமல் போனது.

இதே போல் நீண்டகால போரியல் வரலாறுகளாலும் அர்பணிப்புக்களாளும் நாம் பெற்றுக்கொண்ட எமது அடையாளங்கள் மற்றும் எமக்கே உரித்தான தனித்துவங்களினை இழப்பதன் மூலம் எமக்குரிய உரிமைகளினைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படுவது மட்டுமின்றி எமது இருப்பினைக் கூட காப்பாற்ற முடியாத நிலையேற்படும். இந்நிலையில் தரப்படும் சிறு சலுகைளைக் கூட எமக்கு வழங்கப்பட்ட உரிமைகளாக ஏற்று வாழவேண்டிய துர்பாக்கிய நிலையும்ஏற்படலாம்.

எனவே எமக்கே உரிய தீர்வினை பெற்றுக்கொள்ள அனைவரும் எமக்கே உரிய தனித்துவங்களையும் அடையாளங்களையும் பிரதிபலிக்கின்ற ஓர் தேசத்து மக்களாக நாம் வாழவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரணவெளி

**உலகப்** பிரசித்தமான இடங்களில் அமெரிக்காவின் 'ரேஸ் டிரெக் பிளாஸா' பிரதேசம் ஒன்று. இதற்கு 'மரண வெளி' என்றும் பெயர். ஏன் தெரியுமா?

இங்கு கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனிதர்களோ உயிரினங்களோ, மரம் மட்டைகளோ கிடையாது.


பாலைவனம் போன்று பரந்து விரிந்து கிடக்கும் இப்பிரதேசத்தில் வறட்சிக் காலத்தில் நிலம் வெடிப்பு விழுந்து ஓட்டைகளில் 'ஐஸ்' படர்ந் திருக்கும்.

இந்த மர்ம பூமியில் கற்கள் தானாக நகர்ந்து செல்கின்றன. நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் இந்த மர்மத்திற்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவை நகர்ந்து சென்ற அடையாளங்கள் தெளிவாகக் காணப்படுகின்றனவாம்.

இங்குள்ள கற்கள் இரண் டு அல்லது மூன்று வருடங்களில் முழுப் பிரதேசத் தையும் சுற்றி வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

சில சமயங்களில் இரு கற்கள் ஒரே நேரத்தில் பயணத்தை ஆரம்பிக்கும். ரயில் பாதை போன்று அவை சமாந்தரமாக அந்தப் பூமியைச் சுற்றி வருகின்றன. சில சமயங்களில் அவற்றில் ஒரு கல் வலது பக்கமோ இடது பக்கமோ திரும்பி தனது பயணத்தைத் தனியாகத் தொடர்வதுண்டு. இவை பின்னோக்கி நகர்ந்த சந்தர்ப்பங்களும் இருக்கவேசெய்கிறது.

இந்தப் பரந்த நிலப்பரப்பிற் கு அருகில் இருக்கும் மலையில் இருந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்துண்டுகள் உடைந்து விழுகின்றன. அவையே இந்தப் பூமியெங்கும் நடமாடுகின்றன. இவை நடந்து திரியும் தூரம் 10 ஆயிரம் அடிகளை விட அதிகமாம். சில கற்கள் ஒரு அடி மட்டுமே நகர்கின்றன.

இந்த மர்மப் பிரதேசம் குறித்து முதன் முதலில் 1948 இலே தகவல் வெளியானது. 1972-80 காலப் பகுதியில் பாரியளவிலான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

கற்கள் மர்மமாக நகர்வதற்கு இந்த பாலைவனமா அல்லது அங்குள்ள களி மண் தட்டா காரணம்?

இவை வேகமான காற்றினால்தான் நகர்





## கற்கள் தானக நகரும் அதிசயம்

கின்றன என்று சிலர் கூறலாம். ஆனால் இப்பகுதியில் கடும் காற்று வீசுவதில் லையாம். எனவே அந்த வாதமும் எடு படாது.

நிலத்துக்குள் இருக்கும் ஒருவித சக்தியே கற்கள் நகர்வதற்குக் காரணம் என மெசசுசெட்ஸ் பகுதி ஹெம்சயர் பல் கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்து ள்ளனர்.

வெற்றுக் கண்களுக்குப் புலப்படும் வகையில் இவை நகர்வது கிடையாது.

சிறிய கல்லொன்று வருடம் முழுவதும் இரண்டரை அங்குலம் மட்டுமே நகர்ந்த போதும் 36 கிலோ எடையுள்ள கல்லொன்று 659 அடிகள் நகர் ந்திருக்கிறது. கல்லின் அளவுக்கும் அவை நகர்வதற்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்பதை இது காட்டுகிறது.

இந்தப் பாழடைந்த மர்மமான பிரதேசத்தில் மனித நடமாட்டம் இல்லா விட்டாலும் கற்களின் நடமாட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அவை பற்றிய ஆய்வுகளும் தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னம்பிக்கையின் அ

# நெப்போல

இழந்த இடத்தைப் பிடித்துக்

இழந்த காலத்தை ஒரு போதும் பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையாளம்

பியன்



கொள்ளலாம்

ங்க முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயமென்றால்** என்ன என்றே அறியாமல் தன்னை வளர்த்துக் கொண்ட நெப்போலியன் வரலாற்றைப் படித்தால் தன்னம்பிக்கைக் கதைகளைத் தனியாகப் படிக்கத்தேவையில்லை.

எளிமையான இத்தாலியில் இருந்து குடிபெயர்ந்த குடும்பத்தில் பிறந்தார் நெப்போலியன். உருவத்தில் குள்ளமாக இருந்தாலும் இராணுவத்தில் சேர்ந்து கலக்கி எடுத்தான். ஒரு முறை எண்ணற்ற மக்கள் கூடிப் போராடிக் கொண்டிருந்தார்கள். வீரர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. கொஞ்சம் மிஞ்சினால் மக்கள் பொங்கி விடுவார்கள். கண்ணாடிப் பந்துகளைக் கச்சிதமாகப் பீரங்கிகளில் பொருத்தி போராட்டக்காரர்கள் மீது செலுத்தினான். உயிர் இழப்பு இல்லாமல் கூட்டம் கலைந்தது.

வெகு சீக்கிரமே படைத் தளபதியாக உயர்ந்தார். ஆஸ்திரியாவின் வசமிருந்த இத்தாலியின் பகுதிகளைப் பிடித்துக் காண்பித்தான். ஆனால் கிழக்கு தேசங்களை பிடிக்கும் முயற்சியை நெல்சன் தகர்த்தார்.

ஒரு முறை போர்க்களத்தில் வென்ற பிறகு வீரர்களைக் கொண்டாட அனுப்பிவிட்டு நெப்போலியன் தனியாக வேகமாகக் குதிரையைச் செலுத்திக்கொண்டு பயணப்பட ஆரம்பித்தான். உற்சாக மிகுதியில் இன்னமும் குதிரையின் வேகத்தை அதிகப்படுத்தும் பொருட்டு கடிவாளத்தைப் பிடித்து இழுத்தான்.

குதிரையின் வாயில் இருந்து ரத்தம் சொட்டிக்கொண்டே இருந்தது. சிட்டெனப் பறக்க ஆரம்பித்தது. கிடுகிடு பள்ளம் ஒன்று திடீர் எனக் குறுக்கிட்டது. அப்படியே குதித்து விடலாம் குதிரையால் தாவக்கூடிய தூரத்தை விட ஒரு ஐந்தடி அதிகமாகவே அகலமாக இருந்தது பள்ளம். பார்த்தான். வீரனுக்கு அழகு இப்படி சாவதுதான் என எண்ணிக்கொண்டு முடுக்கினான். பள்ளத்தில் குதிரை தாவி வீழ்ந்தபொழுது, அந்த ஐந்தடியை மிதந்து கொண்டு இருக்கும்பொழுதே தாவி அடிகளோடு தப்பித்தான். தன்னை "விதியின் மனிதன்" என அழைத்துக்கொண்டான்.

நெப்போலியன் பிரெஞ்சுப் புரட்சியால் நாட்டில் ஏற்பட்டு இருந்த கொதிநிலையை பயன் படுத்திக்கொண்டு ஆட்சியைப் பிடித்துக்கொண்டான். என்றாலும், முதலில் மூன்று பேர் கொண்ட அமைப்பைக் கொண்டு ஆள்வது போல பாவ்லா காட்டிவிட்டு ஆட்சிப் பீடம் ஏறி னான். தானே மகுடத்தை எடுத்துச் சூட்டிக்கொண்டான். உலக வரலாற்றில் ஏழை ஒருவரின் மகன் ஒரு மாபெரும் நாட்டின் சக்கரவர்த்தி ஆகிற அற்புதம் அன்றைக்கு நிகழ்ந்தது.


ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் மட்டும் உறங்கிய நெப்போலியன் ஆழ்ந்து வாசிக்கிற பழக்கம் உள்ளவன். வாசிப்பே நம்மைப் பக்குவப்படுத்தும் என்பது அவன் எண்ணம். குள்ளமாக இருந்ததால் அவன் அரசவைக்கு நடந்து வருகிறபொழுது அவன் அணிந்திருக்கும் போர்வாள் உரசி இரத்தினக் கம்பளங்கள் கிழிந்து போகும். பின் இரும்பால் கம்பளம் வைத்தபொழுது உரசிக்கொண்டு தீப்பொறி பறக்க அரசவைக்கு வருவார்.

அவருக்குத் தன்னைவிட இரண்டாண்டுகள் மூத்தவளும், இரண்டு பிள்ளைகளுக்குத் தாயுமான ஜோசபின் மீது முதல் பார்வையி லேயே காதல் பூத்தது. அவளை மணம் செய்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்காக உலகம் முழுக்க இருந்து ரோஜா மலர்ச் செடிகளைக் பரிசாக அனுப்பி வைப்பார்.

அதன் மூலம் உருவான தோட்டம் மிக பிரமாண்டமானது. ஜோசபினுக்கு நெப்போலியன் எழுதிய காதல் கடிதங்கள் தனிக் காவியம். அவள் பிள்ளை பெற்றுத்தர முடியவில்லை என்று விவாகரத்து செய்த பின்னும் பெரிய மாளிகை கொடுத்து அவளுக்காகக் கண்ணீர் வடித்தான் நெப்போலியன். போர்களில் தொடர்ந்து வென்று கொண்டிருந்த நெப்போலியனின் சொந்த வாழ்க்கை வெகு சிக்கனமானது. ஒரிரு செட் ஆடைகள், தன் அறையில் தன் பதினான்கு ஆண்டுகால சம்பளத்தில் வாங்கிய மேசை, நாற்காலி ஆகியவற்றில்தான் தன் வாழ்க்கையை ஒட்டிய எளிமை விரும்பி அவர். இரண்டு வேளை மட்டுமே எளிமையான உணவு சாப்பிடுவார். அரைக் குவளை கோப்பி மட்டும் இரண்டு அல்லது மூன்று வேளை குடிப்பார். வெகு சுறுசுறுப்பாக இருக்கும் அவரின் சின்னம் தேனீ.



பல நாடுகளை வென்ற அவர் செய்த தவறு ரஷ்யாவின் மீதான படையெடுப்பு. தான் கொண்டு வந்த இங்கிலாந்துடன் வியாபாரம் செய்யக்கூடாது என்கிற ஆணையை ஏற்க மறுத்த ரஷ்யா மீது போர் தொடுத்தான். நாட்டையே துப்புரவாக துடைத்து வைத்திருந்தார்கள் மக்கள். ரஷ்ய குளிர் வாட்டி எடுத்தது. உயிரை அப்படியே உருவி எடுத்தது. பல வீரர்கள் சுருண்டு இறந்தார்கள். ஒன்றுமே இல்லாத மாஸ்கோவை கைப்பற்றினார்கள். பசிக்குச் சாப்பிட எதுவுமில்லாமல் குதிரைகளையே வெட்டி உண்ணவேண்டிய நிலைமை. வெறிச்சோடி போன மொஸ்கோவின் தெருக்கள்தான் காத்துக்கொண்டு இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததில் பாதிப் படையைக் காவு கொடுத்துவிட்டு நெப்போலியன் பின்வாங்கினார். அதற்குப் பின் நடைபெற்ற போரில் தோற்று எல்பா தீவில் சிறை வைக்கப்பட்டார் அவர். "ரஷ்யக் குளிர் நெப்போலியனைத் தோற்கடித்தது!" என வரலாறு எள்ளி நகையாடுகிறது.

அப்பொழுது நடந்த ஒரு சம்பவம். ரஷ்யப் படைகளின் கண்ணில்பட்டு தப்ப முயன்று ஒரு தையல்காரனிடம் சரண் புகுந்தார் நெப்போலியன். "என்னைக் காட்டிக் கொடுக்காவிட்டால் மூன்று வரங்கள் தருகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஒரு பெரிய துணிமூட்டைக்குள் ஒளிந்துகொண்டார் நெப்போலியன். ரஷ்யப் படைகள் வந்தன. துணிமூட்டைக்குள் ஐஸ் லைக் தட் எனக் கத்திகளைச் சொருகிப் பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் ஆகாமல் தப்பிவிட்டார். அதற்கு பின் பிரெஞ்சு படைகள் வந்தன. வரங்களை கேட்க சொன்னார் நெப்போலியன்.

"முதலில் கடையின் ஓட்டைச் சரி செய்ய வேண்டும்". "முடிந்தது" என்றார் . "அடுத்து" எனக் கம்பீரமாக கேட்க, "எதிர்க்கடை தையல்காரனை நாடு கடத்தி விடுங்கள். ஒரே தொழில் போட்டி" என்றான் சிரித்துக்கொண்டே, "சரி! அடுத்து?" எனக் கேட்க நீங்கள் அந்த துணிமூட்டைக்குள் இருக்கும்பொழுது கத்தியால் குத்தினபோது எப்படி ஃபீல் பண்ணினீங்கள் என்று தெரிஞ்சாகணும்!" "ஹ்ம்ம்" என்ற நெப்போலியன்

"கிளம்புங்கள்!" எனப் படைகளிடம் சொல்லிவிட்டு வெளியேறும் பொழுது சடக்கென்று திரும்பி, படை வீரனைப் பார்த்து தையல்காரனின் தலையில் படக்கென்று துப்பாக்கியை வைக்கச்சொல்லி ஒன்று இரண்டு மூன்று என்றதும் சுட்டுவிடு என்றதும், துப்பாக்கி ஓட்டை தையல்காரன் தலையில் பொய் ஒட்டிகொண்டது. "ஒன்,டூ,த்ரீ!" என்றதும் அதீத மௌனம், குண்டு வெடிக்கவில்லை. வியர்த்துப்போன தையல்காரனை பார்த்து "இப்படி தான் இருந்தது எனக்கு!" என்றுவிட்டு கிளம்பினார் நெப்போலியன். அந்த அளவுக்கு நகைச்சுவை உணர்வும் அவனிடம் இருந்தது.

எல்பாவில் இருந்து தப்பி வந்தபொழுது மக்கள் மீண்டும் அவர் பின் அணிவகுத்தார்கள். வாட்டர்லூவில் இறுதிப் போர். வை வடிவத்தில் படைகளை நிலை நிறுத்தினான். போரில் வென்று விடுவோம் என்கிற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அதற்கு முந்தைய நாள் நல்ல மழை பெய்தது. இவருக்கு காய்ச்சல் வேறு சொன்ன உத்தரவுகள் தப்பு தப்பாக வீரர்களின் காதுகளில் விழ தோல்வியைத் தழுவினார் நெப்போலியன். இந்த முறை தப்பிக்க முடியாத ஹெலினா தீவில் கொண்டு போய் தனிமைச் சிறை வைத்தார்கள்.

நாற்பது போர்கள் கண்ட நெப்போலியன் கொண்டு வந்த கோட் ஓப் நெப்போலியன் இன்றைக்கும் பின்பற்றப்படும் அருமையான சட்டம். எல்லா மக்களுக்கும் சம உரிமை வழங்கும் அற்புதம் அது. எளிமையான மொழியில் அது எழுதப்பட்டு இருந்தது. நில உடைமை முறையை வேரறுத்து மக்களுக்கு நிலங்களைப் பிரித்து கொடுத்தார். மதத்தை அரசியலில் இருந்து ஒதுக்கி வைத்தார். நெப்போலியன் காலத்தில் அறிவியலுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. வோல்டாவைப் பார்த்து நீங்கள் வருடத்துக்கு ஒரு முறை அரசவைக்கு வந்தால்கூட போதும் என்கிற அளவுக்கு நெப்போலியன் தீராத வாசிப்பு ஆர்வம் கொண்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்பாவில்
சிறைவைக்கப்பட்டு
இருந்தபொழுது
நெப்போலியனுக்கு
கொடுக்கப்பட்ட
சிறிய அறையில்
அவர் எதை
தெரியுமா
வைத்திருந்
தார்?
எல்லா
அடுக்குகளி
லும்
மொத்தமாக
மூவாயிரம்
புத்தகங்கள்
வைத்திருந்
தார். அவர்
மரணத்துக்கு
பிறகு ஆங்கில
அரசே அவரை மாவீரன் என்று
ஏற்றுக்கொண்டது.

ஒரு சம்பவத்தோடு முடித்தால்
நன்றாக இருக்கும்.
நெப்போலியனின் படைத்
தளபதி வேகமாக ஓடி வந்தார்.
கண்களில் கலக்கம். “அரசே! எதிரி நாட்டுப்
படைகள் எல்லாப் பக்கமும் சுற்றி வளைத்து
விட்டார்கள். அவ்வளவு தான்!” என்றபொழுது
நெப்போலியன், “அதனால் என்ன? எல்லாப்
பக்கமும் சுடலாம் என சந்தோசப்படுங்கள்” என்றார்.

**“முடியாது என்பது முட்டாள்களின் அகராதியில் உள்ள வார்த்தை” என்று கூறிய எளிய குடும்பத்தில் பிறந்து உழைப்பால் பேரரசனாக உயர்ந்த நெப்போலியனின் நினைவு நாள் (மே 5).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முன்னொரு காலத்தில்

மூலம் – ஸம்சூர் ரஹ்மான்
மொழி பெயர்ப்பு - கவிஞர் சோ. பத்மநாதன்

புதிய புல்லிதழ் போல மினுமினுக்கும் ஒரு குதிரை
ஓடிவந்து அந்நீர்நிலையின்முன் நின்றது
அதன் பிடரிமயிரிலும் குளம்புகளிலும்
மாலை வெய்யில் மஞ்சள் பூசியது
பளிங்குபோன்ற நீர்ப்பரப்பின் மேலாக
குதிரை தன் கழுத்தை நீட்டியது
சிறைப்பட்ட இளவரசி போன்ற
பாதிநிலா தன்கண்களை
ஊடுருவிப் பார்ப்பதை அது கண்டது
காட்டுவெளியைக் கண்காணிக்கும் இருண்ட
வானத்தைப் பொருட்படுத்தாது
எதையுமே பொருட்படுத்தாது
தன்முகத்தை நீரினுள் மூங்கியது குதிரை
தண்ணீர் பருக அல்ல
சிறைப்பட்ட இளவரசியின் இதழ்களில் முத்தம் பதிக்க

குளிர்நீரின் தீண்டுதலோடு
அதன் முகம் திரும்பி வந்தது
முத்தமிடாமலே
நொறுங்கிய சந்திரன் மீண்டும் தன் முந்திய வடிவம் பெற்றது
மினுமினுக்கும் வீரியமிக்க குதிரையின்
பிடரிமயிரிலிருந்து நீர்த்துளி போன்ற கனவுகளும்
கனவுகள் போன்ற நீர்த்துளிகளும் சொட்டின


மர்மம் நிறைந்த காட்டுவெளியைப் பார்த்த குதிரைக்கு
முன்னொரு காலத்தில் தன் முதுகில் அமர்ந்து
தலையில் சூரியனையொத்த தலைப்பாகை தரித்துக்கொண்டு
காதற்கொடி காற்றில் அசைய
சவாரி செய்த ஆவேசங் கொண்ட வீரன்
நிலத்தில் வீழ்ந்து கிடந்தது
நினைவு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிந்திக்க ஒரு நிமிடம்...

இந்த உலகப் பந்தில் வீரத்தினாலும் எத்தனையோ தியாகங்களாலும் தமிழருக்கென்றொரு உன்னதமான இடத்தினை அடைந்தோம். ஆனால் இன்றும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் போரினாலும் குடும்ப சூழ் நிலைகளினாலும் வறுமையில் வாடி கல்வியினை தொடர்வதற்கு இடர்படும் ஆயிரக்கனக்கான மாணவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.
அத்துடன் எமக்கென்றொரு முகவரியைப் பெற்றுத் தருவதற்கென தமது வாழ்வை தற்கொடையாகிய முன்னாள் போராளிகளின் குடும்ப சூழலும் பெரும் இடர் நிறைந்ததாக காணப்படுகின்றது. எனவே இவர்களது கல்வி மற்றும் குடும்ப சமூக மேம்பாட்டுக்கு உதவி செய்யவேண்டியது காலத்தின் தேவையாகவும் காணப்படுகின்றது. ஆகவே இதற்குரிய நிதி வளத்தினைத் திரட்டுவதற்காகவே தமிழ் தேசிய உணர்வுடன் ‘கலிங்கம்’ எனும் இவ்விதழை ‘யாழ் எயிட்’ அமைப்பு வெளியீடு செய்கின்றது. ஏறத்தாள 6000 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகும் கலிங்கத்தின் வருமானத்தில் இருந்து யாழ் எய்ட் அமைப்பு நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் முன்னாள் போராளிகளின் சுயதொழில் மேம்பாட்டுக்காகவும் அளப்பரிய பணிகளினை ஆற்றி வருகின்றது.
எனவே மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் கலிங்கத்தின் சந்தா தாரர்களாக இணைந்து முகமறியா ஏழை மாணவனின் கல்விக்கு உதவிசெய்தல் மற்றும் எமக்கு முகவரி அளித்தவர்களின் சுயதொழில் மேம்பாட்டுக்கு உதவி அவனின் ஆத்மார்த்தமான வாழ்த்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் எமது நலத்திட்ட உதவிகளை அறிந்து கொள்ளவும் – Face Book - Yarl Aid




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒன்று மட்டும் உறுதி!*
*மலையின் நதிகளெல்லாம்*
*சமுத்திரத்தை நோக்கி!*
*மானுட நதிகளெல்லாம்*
*மார்க்ஸை நோக்கி!*



# கருத்தியல் பனிமூட்டம் நடுவே மார்க்சியம்

தா.குகநேசன்

**இன்று** நாங்கள் முதலாளித்துவ உலகத்தின் புதிய நிலைமாற்றக் காலகட்டத்தின் துவக்கத்தில் நிற்கின்றோம். புதிய தாராளவாத முதலாளித்துவ முகமூடி கிழித்தெறியப்பட்டுள்ளது. எழுச்சி கண்டு வரும் புதிய உலக ஒழுங்கின் நிஜ உருவம் இப்பொழுது புலப்படத் தொடங்கியுள்ளது.

பொருளாதார, சமூக, கலாச்சாரச் அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் என்ற அனைத்துத் தளங்களிலும் பேரளவிலான ஓர் நெருக்கடி வியாபித்து வருகின்றது. இந்த நெருக்கடியானது தேசிய எல்லைகளைக் கடந்து செல்லும் தன்மையினைத் தன்னகத்தே கொண்ட ஒரு நெருக்கடியாக உள்ளது.

ஆகவே நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் கீழ் மட்ட, அடிமைப் பட்ட, ஒடுக்கப்பட்டுள்ள மக்கள் சமூகத்தினரின் பணி அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தலை தூக்கி வரும் விவேகபூர்வமற்ற முதலாளித்துவ அமைப்புக்களை எதிர்த்து நிற்பதாகும்.

இதனை நிறைவேற்றுவதன் மூலம் புதிய உலக ஒழுங்கு உருவாக்கத்திற்கு உலக உழைக்கும் வர்க்கத்தின் ஒரு பாகமாகிய நாங்கள் ஓர் சிறப்பான பங்களிப்பினைச் செய்ய முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு நாம் உலகளாவிய அடிப்படை மூலாதாரத்தினை விளங்கிக் கொள்வது அவசிய மாகிறது.

நமது இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைகள், குறிப்பாக சிங்கள – தமிழ் சமூகங்களுக்கிடையிலான உறவுகள் அறிவு ரீதியாக ஆராயப்படாமல் உணர்ச்சி வேகத்துடனே அணுகப்பட்டுள்ளன. இப்பிரச்சினை சரியானபடி விளக்கப்படாமலும் ஆராயப்படாமலும் உள்ளது. உணர்ச்சி ரீதியான சார்புகளே அதிகமாயுள்ளன. இத்தகைய ஒரு பின்னணியில் தான் தொடர்ந்து நிலவும் இனப்பிணக்குகளுடைய சமூக, பொருளாதார கருத்தமைவு (Ideology) அடிப்படைகளின் சில அம்சங்களை விவாதிக்கவும் பகுப்பாய்வு செய்யவும் சமூக விஞ்ஞானிகள் சிங்கள – தமிழ் அறிவுஜீவிகள் முனைகின்றனர்.

ஒரு சமூகத்தின் மேலாதிக்கம் பெற்ற குழுக்கள் தம் மேலாதிக்கத்தை நியாயப்படுத்தவும் தம் நலன்களை பேணுவதற்கும் கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் உருவாக்கிக் கொள்கின்றன. இதனையே கருத்தியல் (Ideology) என்று சமூகவியலாளர்கள் கூறுவர். ஒரு கருத்தியல் அதிகாரத்துடன் தொடர்புடையது (Power) அதிகாரம் அந்த குழுக்களை கீழ்ப்படுத்தி வைக்கவும் சமூக சமத்துவமின்மையை நியாயப்படுத்தவும் கருத்தியல் பயன்படுகிறது. மக்கள் சிந்தனையில் பனிமூட்டமாக கவியும் பல கருத்தியல்கள் அவர்களை ஒடுக்குவதற்காகவும் அதற்குரிய சம்மதத்தையும் (Consensus) பெற்றுத் தருகின்றது. ஒடுக்குதலின் வேதனையையும் துன்பத்தையும் தணித்து ஆறுதலையும் கூட வழங்குகின்றது.

கருத்தியல் என்னும் சொல்லை Destgtt de Tracy என்பவர் முதலில் விஞ்ஞான ரீதியில் அறிமுகம் செய்தார். அதன் பின் அரை நூற்றாண்டு கழித்து கார்ல் மார்க்ஸ், பிரடரிக் ஏங்கள்ஸ் இருவரும் இணைந்து கருத்தியல் என்றால் விஞ்ஞானம் அல்ல. அது மனிதர் கட்டமைத்துக் கொள்ளும் பொய் உணர்வு (False – Consciousness) என்று கூறினர்.

கார்ல் மார்க்ஸ் உழைக்கும் மக்கள் வர்க்கத்தின் அடிப்படையில் ஆய்வு செய்தார். அவரின் கூற்றுப்படி மனித சமுதாய வரலாறு என்பது வர்க்கப் போராட்டத்தின் வரலாறு தான் என்றார். உடைமையாளரான வர்க்கம் (Bourgeoisie) உழைக்கும் வர்க்கத்தினரை (Proletarians) சுரண்டுவதற்கான அதிகார முறைமையே முதலாளித்துவம் என சுட்டிக்காட்டினார். இதனை அவர் தனது ஆய்வின் வெளியீடான 'Das Kapitol' என்னும் நூலில் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மார்க்சியம் என்பது ஒரு உயிருள்ள தத்துவம் மார்சியசம் விஞ்ஞான ரீதியானதும், சமூக வாழ்வை விளக்கி விரைவான வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்கும் ஒரு சித்தாந்தம். உலகின் ஐந்து கண்டங்களிலுமுள்ள உழைக்கும் மக்களினதும் அடிமைப்பட்டுள்ள வர்க்கத்தினரதும் உரிமை முழக்கத்தின் கோரிக்கைக் குரலில் அது ஒலித்துக் கொண்டே இருக்கும். ஏனெனில் அவலமான நிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் மனித வர்க்கத்திற்கு, வர்க்க பேதம் ஊட்டி அவர்களை வலிமை பெற்ற மனிதர்களாக உருவாக்குவது மார்க்சிய தத்துவமே தவிர வேறெதுவும் அல்ல என்பதை, அவனியில் யாரும் மறுக்க முடியாது.

இந்த மார்க்சிய தத்துவத்தை “தீண்டப்படாதது” என்று ஒரு சாரார் கூக்குரல் எழுப்புவது இயல்பே. ஏனெனில் அத்தகையோர் இச் சித்தாந்த வளர்ச்சியால் பாதிக்கப்படுவர். அவர் தம்மைக் காப்பாற்ற தவறான விஞ்ஞானத்தைப் போதித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சாரம் செய்யத் தயங்கார். கலை, இலக்கியம் உட்பட பல்வேறு பிரச்சார ஆயுதங்கள் யாவும் அவர்கள் ஆதிக்கத்திலேயே உள்ளன.

உலகைப் பற்றிய விஞ்ஞான ரீதியான கருத்தே மார்க்சியம்.

நாம் வாழும் உலகம் அந்த உலகின் ஒரு பகுதியாகிய மனித சமூகம் ஆகியவைகளின் பொதுத்தத்துவம் மார்க்சியம்.

மனித சமூகம் இன்றைய நிலையில் இருக்கக் காரணம் என்ன? அது ஏன் மாறுகிறது? இன்னும் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும்? என்பன போன்ற விடயங்களை மார்க்ஸ் ஆராய்ந்தார்.

கார்ல் மார்க்ஸ் பல கஷ்டங்களுக்கும் வறுமைக்கும் மத்தியில் மிகுந்த சிரமத்துடன் "Das Kapitol" என்ற "மூலதனம்" என்னும் தனது அரிய விஞ்ஞானப் படைப்பினைத் தொகுத்து 1867ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14ம் திகதி வெளியிட்டார். இந்த மூலதனம் என்னும் நூலை அவர் எழுதி முடிக்க எடுத்த காலம் 15 வருடங்களாகும். அதற்காக அவர் படித்த நூல்களின் தொகை 1500, இலண்டன் மாநகரிலேயே கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவத்திற்கு எதிரான "மூலதனம்" என்னும் சாவோலையைத் தீட்டினார்.

முதலாளித்துவத்திற்கு எதிரான சோஷலிஸ பயணத்திற்கு அறைகூவல் விடுத்தார். இதற்கு சில ஆரம்ப நியதிகள் உள்ளன என்று ஆராய்ந்தார். முதலாவதாக இந்த முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டு அடிமைப்படும் வர்க்கம் அரசியல் ஆதிக்கம் பெற வேண்டும் என்றார். அதாவது இது அரசு இயந்திரத்தின் மேல் கை வைப்பது அல்ல. அந்த முதலாளித்துவ அரச முறைமையை உடைத்தெறிய வேண்டும் என்றார் மார்க்ஸ்.

அப்படியென்றால் மார்க்ஸ் ஒரு வன்முறைவாதியா? மார்க்சியம் என்பது வன்முறைகளைத் தூண்டும் ஒரு இயக்கம் அல்ல. அவைகளை எப்படி வெற்றி கொள்வது என்பதே மார்க்ஸியமாகும்.

இதற்காக நாம் வரலாற்றினைச் சற்று நோக்குவோம்.

வரலாறு முழுவதும் ஒவ்வொரு சமூகத்திலும் காணப்பட்ட உலகளாவிய ரீதியிலான ஒரு தோற்றப்பாடு வன்முறை எனலாம். (Political Violence). ஆனால் மார்க்ஸிஸம் ஒரு அரசியல் நடத்தை (Political Behavior)

அரசியல் செயற்பாடுகள் அதிகமானவற்றில் வன்முறை கலந்து காணப்படுகின்றன.

16ம் நூற்றாண்டில் வாழ்ந்த மாக்கியவல்லி அரச தந்திரக்கலையில் வன்முறையின் நல்ல பயன்பாட்டைக் கண்டார்.

17ம் நூற்றாண்டில் தோமஸ் ஹொப்ஸ் அதிகாரத்தை உறுதிப்படுத்த வன்முறை அவசியமானது என்றார். வன்முறை என்பது மனிதனின் தோற்றக்காலப் பகுதியில் இருந்து தொடர்ந்து வருகின்ற ஒன்றாக இருந்திட்ட போதிலும் இதுவோர் எண்ணக்கருவாக 20ம் நூற்றாண்டில் அறிமுகமானது. அரசியலில் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்குப் பயன்படுத்தும் பலப்பிரயோகமே அரசியல் வன்முறையாகும். இதனைக் கட்சிகள், ஆதரவாளர்கள், தன்நலக்குழுக்கள் போன்றன தமது நோக்கினை அடைந்து கொள்ளும் கருவியாகப் பயன்படுத்துகின்றன. அதாவது இருக்கின்ற ஒழுங்கைக் குழப்புவது அல்லது அழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுதல், குறிப்பிட்ட ஆட்களையோ,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களையோ தாக்குவது அல்லது ஆதாயம் வேண்டிச் செயற்படுவது போன்றவை களாகும் என்றார் பேராசிரியர் நைபூர் என்பவர்.

இது நாசகார வேலைகள், படுகொலைகள், பலவந்தச் செயற்பாடுகள், கடத்தல் அச்சுறுத்தல், கொரில்லாப் போராட்டம், மரபு ரீதியான யுத்தம், பயங்கரவாதம், சமயப் புரட்சி போன்ற வடிவங்களில் ஏற்படுகின்றன. இதற்கான காரணங்களாக பின்வருவன வற்றைக் கூறமுடியும்,

1. அரசியல் அதிகார துஷ்பிரயோகம்
2. ஸ்தாபனங்களில் வீழ்ச்சி ஏற்படுதல்
3. கல்விக்கும் வேலைவாய்ப்பிற்குமிடையே இடைவெளி அதிகரித்தல்
4. மொழிக் கொள்கை
5. சாதி ஒடுக்குமுறை
6. இனப்பாகுபாடு
7. சிறுபான்மையினம் புறக்கணிக்கப்படல்
8. சாதியமைப்பு முறை



மூன்றாம் உலக நாடுகளில் தேசிய வாதம், குடியேற்றவாதம், குடியேற்ற வாதத்திற்கு எதிரான வன்முறை எதிர்ப் பானது அடக்கப்பட்ட மக்களின் அர சியற் செயற்பாடாகப் பார்க்கப்படு கின்றது. அந்த வகையில் மார்க்சியம் அடக்கு முறையாளர்களின் வன்முறை களுக்கு எதிராக அடக்குவோரின் வன்முறையைச் சட்டபூர்வமானதாக நீதியான அரசியற் செயற்பாடாகக் காட்டுகின்றது.

இப்படியாக மார்க்சிய தத்துவ மானது மனிதப் பண்புகள் மாண்புற மணம் வீசித் திகழக் கூடிய புதிய தொரு சமுதாயத்தைப் படைத்திட விழைகின்ற இளம் நெஞ்சங்களில் நிலை பெற்றிருக்க வேண்டிய ஒன்றா கும். சுருங்கக் கூறின் "மூலதனம்" என் னும் நூல் இவர்களுக்கு என்றே எழு தப்பட்டது.

அறிவிலே தெளிவுமனதிலே உறுதி
அகத்தில் அன்பினோர் வெள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மகாகவி பாரதியார் பாடலுக்கேற்ற பாட்டுடைத் தலைவனாக விளங்கத் தக்கவர் பேரறிஞர் கார்ல் மார்க்ஸ்.

மற்றைய தத்துவங்கள் யாவும் சமுதாய அமைப்புக்களுக்கு விளக்கம் தருபவை. மார்க்சியம் ஒன்றே சமுதாயத்தை மாற்ற வழி கூறும் சித்தாந்தமாகும். ஆகவே மார்க்சிய சித்தாந்தம் என்றால் என்ன? மார்க்ஸின் போதனைகள் யாவை?

மார்க்ஸின் கருத்துக்களின் போதனையின் குழுத்தொகுப்பு முறையே மார்க்சியம்.

19ம் நூற்றாண்டில் மூன்று முக்கியமான தத்துவப் போக்குகள் இருந்தன. அவை மூன்றும் மனித குலத்திடையே முன்னேற்றத்தில் தலை சிறந்தவையாக விளங்கிய மூன்று நாடுகளை சேர்ந்தவையாகும். அவை ஜேர்மன் முதுபெரும் தத்துவஞானம், ஆங்கிலேய முதுபெரும் அரசியல் பொருளாதாரம், பிரேஞ்சு சோஷலிஸம், அத்துடன் பொதுவாக பிரஞ்சுப் புரட்சிப் போதனைகள் என்பனவாகும். இந்த மூன்று தத்துவப் போக்குகளையும் தொடர்ந்து ஆராய்ந்து அவற்றிற்கும் பூரணத்துவம் அளித்த மேதைதான் மார்க்ஸ். அவரது எதிரிகள் கூட இதை ஒப்புக்கொள்கின்றனர். இந்தக் கருத்துக்கள் முழுவதும் சேர்ந்துதான் நவீன காலத்திய பொருள் முதல்வாதமாகவும், நவீன காலத்திய விஞ்ஞான சோஷலிஸமாகவும் அமைந்துள்ளன.

பொருளியல், தத்துவம், அரசியல் என்று மூன்று கூறுகளாக மார்க்சியத்தைப் பிரித்து நோக்குவது ஒரு வகையில் தவறானதே. மார்க்சியத்தின் மூலங்களைச் சுட்டிக் காட்டுவதாகவே—

- இங்கிலாந்து நாட்டின் அரசியல் பொருளாதாரம்
- ஜேர்மனிய நாட்டின் ஹெகலிய தத்துவம்
- பிரெஞ்சு நாட்டின் அரசியல் சிந்தனை

ஆகியவற்றை குறிப்பிடுகின்றோம்.

இந்த அடிப்படையில் மார்க்சியத்தின் மூன்று முக்கிய கூறுகளாக

1. மார்க்சிய பொருளியல்
2. இயக்கவியல் பொருள் முதல் வாதம்
3. வரலாற்றுப் பொருள் முதல் வாதம்

என்பன அமைகின்றது. மார்க்சியத்தின் முப்பெரும் சிறப்புக்கள் இவைகளாகும்.

❖ முதலாவதாக நாம் கார்ல் மார்க்ஸின் தத்துவஞானப் பொருள் முதல் வாதம் பற்றி நோக்குவோம். மார்க்ஸ் 2500 வருடகால சமூக உற்பத்தி முறைமை பற்றி ஆராய்ந்துள்ளார். இதன் முதல் அவதானிப்பானது கிரேக்க வரலாற்று ஆசிரியர்களாலும் தத்துவவியலாளர்களாலுமே ஆராயப்பட்டது. ஆனால் இந்த முறைமையின் உண்மைத்தன்மையை விஞ்ஞான பூர்வமாக வெளிக் கொணர்ந்தது மார்க்ஸ் ஏங்கெல்ஸ் இருவருமே. 1844 – 1845 ஆண்டுக் காலத்தில் மார்க்ஸின் கருத்துக்கள் உருவம் பெற்றன. அக்காலம் முதல் அவர் ஒரு பொருள் முதல்வாதி. (Materialist) லுத்விக் பாயர்பாக் என்னும் தத்துவஞானியின் கருத்துக்களை அவதானித்த மார்க்ஸ் பொருள் முதல் வாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமான அளவு முழுமை பெறவில்லை எனக் கருதினார். அதற்கு அவர் கூறிய விளக்கமானது.

1. பழைய பொருள் முதல் வாதம் பெரும்பாலும் இயந்திரவகைப்பட்டது.

2. இரசாயன விஞ்ஞானத்துறையிலும், உயிரியல் விஞ்ஞானத் துறையிலும், மின் தத்துவத்திலும், அவைகள் நவீன முன்னேற்றங்களை கணக்கில் எடுக்கத் தவறிவிட்டன.

3. அவர்களின் பொருள் முதல் வாதம் சரித்திர இயலுக்கு புறம்பானது.

4. இயக்க இயலுக்கும் புறம்பானது.

இதே சமயம் ஹெகலின் இயக்கவியல் வளர்ச்சி பற்றிய தத்துவமும் மார்க்ஸின் கவனத்திற்கு வந்தது. இயக்கவியல் (Dialectics) தத்துவத்தை உறுதிப்படுத்துவது இயற்கைதான். இதற்கு விடயங்களை நவீன கால இயற்கை விஞ்ஞானம் தந்து கொண்டேயிருக்கின்றது. ரேடியம், மின்னணுவியல், மூலகங்கள் முதலிய இயற்கையின் இயக்கப் போக்கு, இயக்கவியல் வகைப்பட்டதே என்றார் மார்க்ஸ். இயக்கப் போக்குகளின் ஒரு தொகுப்பாகவே இப் பிரபஞ்சத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், இந்த இயக்கவியல் தத்துவத்திற்கு இறுதியானதாகவோ, முடிவானதாகவோ அல்லது புனிதமானதாகவோ எதுவுமே கிடையாது. எல்லாவற்றையும் தற்காலிகமாகவே நோக்க வேண்டும் என்கிறது. அதாவது உருவாகிக் கொண்டும் மறைந்து கொண்டும் இருக்கிற, கீழ் நிலையில் இருந்து மேல் நிலைக்கு முடிவில்லாமல் ஏறிச் சென்றபடியே இருக்கின்ற இடையறாத இயக்கப் போக்கு ஒன்றைத் தவிர வேறு எதுவும் அதன் முன் நிலைத்து நிற்க முடியாது.



ஹெகலிய தத்துவ ஞானத்தை அறிந்தேற்றுக் கொண்டு அதை வளர்த்தார். இதன் அடிப்படையில் கார்ல் மார்க்ஸ் சரித்திரம் பற்றிய பொருள் முதல் வாதத்தைத் தோற்றுவித்தார்.

பயாபக்கின் பொருள் முதல் வாதத்தையும் ஹெகலின் இயக்கவியல் ஞானத்தையும் மார்க்ஸ் தொடுத்துப் பார்த்து தனது மாக்ஸியம் என்னும் கருத்தியலை வெளியிட்டார்.

ஆம்! இயக்கவியல் பொருள் முதல்வாத தத்துவத்தின் தந்தை கார்ல் மார்க்ஸ். மனித அறிவு இயற்கையின் வளர்ச்சியைப் பிரதிபலிப்பது. அவனது சமூக அறிவு சமூகத்தின் பொருளாதார அமைப்பை ஒட்டியது. பொருளாதாரம் என்ற அடிப்படை அமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் மேல் எழுப்பப்பட்ட மேல்மட்ட அமைப்பே அரசியல் நிறுவனங்களாகும். இவ்வாறு மார்க்ஸ் கடந்தகால சரித்திரத்தை வரலாற்றுப் பொருள் முதல்வாத கண்டுகொண்டு பார்த்து, இயக்கவியல் பொருள் முதல் வாததததைச் சிந்தனையை தூண்டும் ஒரு விஞ்ஞான ஆயுதமாக அறிவித்தார். இந்த மார்க்ஸிய சித்தாந்தம் மூலம் சரித்திரத்தை விதிக்குட்பட்ட, ஒருமித்த இயக்கப் போக்காக விஞ்ஞான ரீதியில் நாம் பயில்வதற்கு மார்க்ஸ் வழிகாட்டினார்.

## மார்க்ஸின் பொருளியல் சித்தாந்தம்

பொருளாதாரம் என்ற அடிப்படை அமைப்பின் மேலேயே அரசியல் என்ற கருத்தமைவு கட்டப்படுகின்றது. மார்க்ஸின் (மூலதனம்) என்ற நூலில் இது விரிவாக ஆராயப்படுகின்றது.

முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள் பண்ட உற்பத்தி, பண்டப் பரிமாற்றம் மூலம் பண்டங்களை, பொருட்களை மட்டுமே கண்டனர். ஆனால் பண்டங்களுக்கிடையே மனித உழைப்பை, உறவுகளைக் கணக்கிட்டுக் கூறியவர் மார்க்ஸ் ஒருவரே!

மனித உழைப்புச் சக்தி பண்டமாகிறது. தொழிலாளி தன் உழைப்புச் சக்தியை நிலம், தொழிற்சாலை, மூலதனம் உள்ள முதலாளிகளுக்கு விற்கின்றனர். அவன் தன் உழைப்பின் ஒரு பகுதியில் உண்டு வாழ முயற்சிக்கின்றான். மறுபகுதி உபரி மதிப்பாக, லாபமாக முதலாளியின் ஆதிக்கத்தில் குவிகிறது. "உபரி மதிப்பு" என்ற தத்துவமே மார்க்ஸின் பொருளாதார சித்தாந்தத்தின் அடிக்கல் ஆகும்.

## மார்க்ஸிஸம் அல்லது மார்க்சியம்

சோஷலிசம் பற்றி பலர் பல கனவு கண்டனர். அது கற்பனை சோஷலிசம். மார்க்ஸ் விஞ்ஞான சோஷலிஸத்திற்கு வழி காட்டினார். ஐரோப்பாவில் தோல்விடைந்த பல புரட்சிகளுக்குத் தக்க விளக்கம் கூறினார்.

மேல்மட்ட அமைப்புக்களான ஒழுக்கம், மதம், அரசியல், சமூக சுலோகங்கள், உறுதிமொழிகள், சலுகைப் பேச்சுக்கள் யாவற்றிற்கும் பின்னால் ஒரு வர்க்க நலன் மறைந்துள்ளது. இதைக் கண்டறியும் வரை மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டேயிருப்பர். வர்க்க உணர்வு ஐக்கியம், போராட்டம் சோஷலிச சமுதாயத்திற்கு வழி வகுக்கும் என்றார்.

## மார்ச்சியம் என்னும் கருத்தியல்

மார்க்ஸியம் என்பது ஒரு அரசியல் கருத்தியல். அரசியல் ரீதியிலான கருத்தியல் என்பது ஒரு தனிமனிதனிடம் காணப்படும் போது அது அத்தனி மனிதனைக் கொண்ட சமூகத்தினைச் சார்ந்தே காணப்படும். இக் கருத்தியல் என்பது இடைவினைகளினூடாக ஏனைய சமூக அங்கத்தவர்களுக்குக் கடத்தப்படலாம். இதன் போது அரசியல் சமூகமயமாதலானது கருத்தியல் ரீதியாகக் கொண்டு செல்லப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலர் கருத்தியல் ரீதியாகச் சிந்திக்கக் கூடியவர்களாகவும் பெரும்பான்மை மக்களின் கருத்தியல் அம்சங்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும் அல்லது நிராகரிக்கக் கூடியவர்களாகவும் காணப்படுவர். சமூகத்தில் காணப்படும் பிரதான அரசியல் கருத்தியல்களான சோஷலிஸம், கம்யூனிசம், தாராண்மைவாதம் என்பவற்றை மனிதர்கள் தமது கல்வி மற்றும் பகுப்பாய்வு சிந்தனையைக் கொண்டு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக அணுகும் போது சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கலாம். இதன் அடிப்படையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் சார்ந்து நிற்கின்ற தெரிவு செய்த கருத்தியல் சார்பாக முழங்குவர்.

ஒரு பூரண கருத்தியலானது சமூகமயமாகும் பொழுது ஒரு ஒழுக்கத்தினை ஏற்படுத்தும். இவ்வாறு ஏற்படுத்தப்படும் கருத்தியல் சமூகத்தின் அடிப்படைக் கருத்துக்களாக காணப்படுவதுடன் அடிமட்ட மக்களின் மனங்களில் மாற்றத்தினைக் ஏற்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

இரு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஜேர்மனியில் ஏற்படுத்தப்பட்ட இனவாத கருத்தியல், கைத்தொழில் சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட தாராண்மைவாதக் கருத்தியல், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட கருத்தியலான சுதந்திரம் உடைய பிரஜைகள் அடுத்தவர்களின் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றார்கள் என்பன அரசியல் சமூகமயமாக்கலில் முக்கிய இடத்தினைக் கொண்டுள்ளன. கியூபா மற்றும் முன்னைய சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளில் பொதுவுடமைக் கருத்துக்கள் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஆனால் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தனிமுதன்மைவாதமும், இந்தியாவில் தேசியவாதமும், இலங்கையில் இனவாதமும் சமூகத்தில் அரசியல் ரீதியாக முக்கிய இடத்தினைப் பெற்றிருக்கிறது.

கருத்தியல்களாவது அரசியல் ரீதியாக சமுதாயத்தில் ஒருவித வகிபங்கினைக் கொண்டுள்ளன. இதன் அடிப்படையில்

1. கருத்தியல் ரீதியாகச் சிந்திக்க வழிவிடவும்
2. மதிப்பீட்டினை மேற்கொள்ளவும்
3. அரசியல் முன்னுரிமை வழங்கவும்
4. முடிவு எடுத்தலை அரசியல் நிகழ்வுடன் தொடர்பு படுத்திப் பார்க்கவும்
5. கருத்தியல் ரீதியாக வேறுபட்ட முடிவுகள் வரும் போது ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கவும் கருத்தியல்களானது துணையாகக் காணப்படுகின்றன.



இதன் பின்னணியில் பார்க்கும் போது கருத்து முதல்வாத நிலையில் இரண்டும் உலகில் மிக எளிதானவை. காரணம் யதார்த்த உண்மையை அடிப்படையாகக் கொள்ளாமலும், யதார்த்தத்தில் பரீட்சிக்காமலும் யார் எவ்வளவு விழல் அலம்ப விரும்பினாலும் அலம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறம் பொருள் முதல் வாதம் இயங்கியல் இரண்டிற்கும் முயற்சி என்பது அவசியம். அவை யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு யதார்த்தத்தில் பரீட்சிக்கப்பட வேண்டும். ஒருவர் முயற்சித்தால் ஒழிய அவர் கருத்து முதல்வாத நிலையில் இருந்து சறுக்கி விழுவது சாத்தியம்.

ஆனால் மார்க்சிய சித்தாந்தமானது மனித சமுதாயத்தின் சரித்திரத்தை சரித்திரவியல் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, "இதுவரை இருந்து வந்திருக்கிற சமுதாயத்தின் சரித்திரம் எல்லாம் வர்க்கப்போராட்டத்தின் சரித்திரமே" என்று வர்க்க போராட்டத் தத்துவத்தை உலகிற்கு உணர்த்தியதோடு, "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!" நீங்கள் இழப்பதற்கு கைவிலங்குகளைத் தவிர வேறொன்றுமில்லை, வெல்வதற்கு ஓர் உலகம் இருக்கிறது" என உலக உழைக்கும் வர்க்கத்திற்கு அறைகூவல் விடுத்த மகத்தான மாமேதை கார்ல் மார்க்ஸ்.

வெளி உலகை மாற்ற விஞ்ஞான அறிவு பயன்படுவது போல, சமூகத்தை விஞ்ஞான ரீதியாக பரிசீலனை செய்வதால் பெறும் அறிவு சமூகத்தை மாற்றப் பயன்படுகிறது. வெளி உலகை நிர்ணயிக்கும் நியதிகளைப் போன்று சமூக அசைவின் நியதிகளும் இருக்கின்றது. மனிதனுக்கும் பொருள்களுக்கும் பொருந்தும் சர்வ வியாபகமான இந்த நியதிகளை மார்க்ஸின் தத்துவம் அல்லது உலகைப் பற்றிய விஞ்ஞான ரீதியான கருத்து எனலாம்.

கார்ல் மார்க்ஸின் முக்கியமான கண்டுபிடிப்பில் ஒன்றுதான் வர்க்கப் போராட்டம். வர்க்கப் புரட்சி என்பதாகும். நம்மை ஆளும் விதிகள் என்னவென்பதைக் கண்டு பிடிப்பதற்கான ஒரு வழிகாட்டியை அதாவது வர்க்கப் போராட்டம் என்ற தத்துவத்தை மார்க்சியம் தருகிறது. இரண்டு பெரிய வர்க்கங்கள் பூர்ஷ்வா வர்க்கம், பாட்டாளி வர்க்கம் சமுதாயங்களில் இருந்து வருகிறது. இதனை மகத்தான பிரெஞ்சுப் புரட்சியின் காலம் தொட்டு ஐரோப்பிய சரித்திரமானது நிகழ்ச்சிகளின் அடித்தளத்தில் மறைந்துள்ள இந்த உண்மையான அம்சத்தை, வர்க்கப் புரட்சியை மார்க்ஸ் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார். முதலில் சரித்திரம் முழுவதையும் புரிந்து கொள்வதற்குரிய மூல சூத்திரம் என்று பகிரங்கப்படுத்தினார்.

கார்ல் மார்க்ஸின் தத்துவத்தை மிகவும் ஆழ்ந்த ரீதியிலும், முழுமையான வகையிலும், விபரமாயும் உறுதி செய்ய வழிகாட்டுவது அவருடைய பொருளாதாரப் போதனை தான். நவீன காலங்களில் நாம் மார்க்ஸ் கனவு கண்ட வர்க்கப் போராட்டங்களைக் காண முடியாவிட்டாலும் மார்க்சிய நோக்கில் பின்வரும் அரசியல் புரட்சிகளை நோக்குவோமாக,

அரசியல் பங்குபற்றலில் சமூக விஞ்ஞானிகளின் கருத்துப்படி சட்டரீதியற்ற மற்றொரு அம்சம் புரட்சியாகும். அரசியல் பொருளாதாரம் மார்க்ஸ் கண்டறிந்தது போன்று சமூக மாற்றத்தினை ஏற்படுத்த நினைக்கும் போது ஒழுங்குபடுத்தப்பட்ட தலைமைத்துவத்தின் கீழ் புரட்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. உதாரணம்:

- ✓ *1776* - அமெரிக்கப்புரட்சி
- ✓ *1789* - பிரான்சியப் புரட்சி
- ✓ *1917* - ரஷ்யப் புரட்சி
- ✓ *1922* - துருக்கியப் புரட்சி
- ✓ *1949* - சீனப்புரட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


✓ ***1959*** - கியூபப் புரட்சி

✓ ***1979*** - ஈரானியப் புரட்சி

மேற்கூறிய புரட்சிகளாவன புதிய சமூக மாற்றம் கருதி நடைமுறையில் காணப்பட்ட சட்டத்திற்கு முரணாக ஒழுங்கமைக்கப்பட்ட புரட்சிகளாகும். புரட்சிகளின் மூலம் மக்கள் பங்குபற்றுதலை மேற்கொண்டு கருத்தியல் ரீதியாகப் புதிய ஒழுங்குகளை ஏற்படுத்து கின்றார்கள். ரஷ்ய, சீன, கியூபப் புரட்சிகள் கம்யூனிச அரசினை உருவாக்க ஏற்படுத்தப்ப ட்டதுடன் ஈரானியப் புரட்சி இஸ்லாமிய அடிப்படைவாத அரசினையும் உருவாக்கியது.

நவீன காலத்திலுள்ள எந்தவொரு சமுதாய அமைப்பும், புதியதொரு சமுதாய அமைப்பை வரவிடாது. அப்படியே வந்தாலும் பின்னுக்குத் தள்ளத்தான் முயற்சிக்கும். ஆனாலும் புதிய சமுதாயம் முன்னுக்கு வருவதற்கு மீண்டும் போராடும். அதில் வெற்றியும் பெறும். இதுவே உலக வரலாறு என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டியுள்ளார். ஆம், மார்க்சியம் வல்லமை வாய்ந்தது. ஏன் மார்க்ஸின் தத்துவஞானப் முதல்வாதம் ஒன்றுதான் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதுவரை உழன்று கொண்டிருந்த ஆன்மீக அடிமைத்தனத்திருந்து வெளியேறும் வழியைக் காட்டியிருக்கிறது. மார்க்ஸின் பொருளாதாரத் தத்துவம் ஒன்றுதான். பொது வான முதலாளித்துவ அமைப்பு முறையில் விளக்கியுள்ளார். அதாவது முதலாளித்துவ சுரண்டலில் மூடி மறைக்கப்பட்ட இரகசியங்களை கார்ல் மார்க்ஸ் ஆதார பூரமாக தெளிவாக்கியுள்ளார். கார்ல் மார்க்ஸ் என்னும் இந்த சமூக விஞ்ஞானி "Das Kapitol" என்ற "மூலதனம்" நூலை எழுதியிராவிட்டால், மனித வர்க்கமும் முதலாளித்துவ அமைப்புப் பற்றித் தெரிந்திருக்க முடியாது.

மனித சமுதாயம் தன் நீண்ட நெடிய வரலாற்றில் எண்ணற்ற மேதைகளை, அறிஞர்களை, விஞ்ஞானிகளை, அரசியல் வித்தகர்களை உருவாக்கி உள்ளது. காலவெள்ளத்தில் பலருடைய பெயர்கள் அடித்துச் செல்லப் பட்டு விட்டன. ஆனால் மனித வரலாற்றிலே என்றென்றும் நின்று நிலவும் பெருமைக்குரிய சிறப்பான இடத்தைப் பெறுவது கார்ல் மார்க்ஸ் பெயர் ஒன்று தான்.




**"பகுத்தறியும் திறன் கொண்டுள்ள ஒருவரால் மட்டுமே இன்று மார்க்ஸிய வாதியாக இருக்க முடியும்"**

- ஜேம்ஸ் பெட்ராஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாரசியங்கள் 3

## 1 உங்களைப் பற்றிப் பத்து விஷயம் சொல்லட்டா?

1. இந்த நிமிஷம் இதைப் படித்துக் கொண்டிருக்கின்றீர்கள்.
2. உங்களுக்குத் தமிழ் தெரியும்.
3. உதடு பிரிக்காமல் "ப"என்று சொல்ல முடியாது.
4. சொல்லிப் பார்க்கின்றீங்கள்.
6. உங்களை நினச்சு நீங்களே சிரிச்சுக்கொள்ளுறீங்கள்
7. சிரிச்ச சிரிப்பிலை 5நம்பர் மிஸ் ஆனதை கவனிக்காம விட்டுட்டீங்க.
8. நம்பர் 5 இருக்கா? என்று செக் பண்ணி அடடே இல்லையே என்று சூள் கொட்டுறீங்கள்.
9. இன்னும் வாய் விட்டு சிரிக்கறீங்கள் ஏனென்றால் உங்களுக்கு நகைச்சுவை உணர்வு அதிகம்.
10. அடுத்தவங்களையும் கூப்பிட்டுப் படிச்சு காட்டுவீங்கள்

## 2



பகலிலை உங்களுக்குக் கண் தெரியாதா டொக்டர்.?"

"தெரியுமே?ஏன் கேட்கிறீங்கள்?"

"இல்லை பார்வை நேரம் மாலை ஆறிலிருந்து எட்டுவரை என்று போர்ட் வைச்சிருக்கிறீங்களே அதுதான் கேட்டேன்.!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3




**காதலியைப்** பிரிந்து
போர்க்களத்தில் இருந்த
ஒரு இராணுவ வீரனுக்கு
அவன் காதலியிடமிருந்து ஒரு கடிதம்.
“நீ சென்ற பிறகு
எனக்கு ஒரு BoyFriend கிடைத்தான்.
அவனைத்தான் நான் மணக்கப் போகிறேன்.
அதனால், உன்னிடம் உள்ள என்
புகைப்படத்தைத் திருப்பி அனுப்பிவிடு“
என்று அதில் எழுதியிருந்தது.
அவளுக்குப் பதிலடி கொடுக்க நினைத்த அவன்,
சக வீரர்களின் காதலி, தோழிகள் என்று
பல பெண்களின் புகைப்படங்களையும் சேகரித்து,
அவற்றோடு அந்தக் காதலியின்
புகைப்படத்தையும் சேர்த்து அனுப்பினான்.
கூடவே, ஒரு கடிதம் “உங்கள் கடிதம்
கிடைத்தது. எவ்வளவு யோசித்தும்
உங்கள் முகம் எனக்கு ஞாபகம் வரவேயில்லை.
அதனால் நான் இதுவரை சந்தித்த எல்லாப் பெண்களின்
புகைப்படத்தையும் அனுப்பி
உள்ளேன். உங்கள் பட்த்தை எடுத்துக்
கொண்டு, மற்றதைத் திருப்பி அனுப்பி விடவும்!““

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவியல் ரீதியிலான தீர்வு





**வாத்தியார்** வகுப்பறைக்குள் நுழைந்தார்.

மேசை மீதிருந்த கண்ணாடி டம்ளரை எடுத்துத் தூக்கிக் காட்டினார்.

"இது எவ்வளவு வெயிட் இருக்கும்?"

100 கிராம், 50 கிராம் என்று மாணவர்கள் ஆளாளுக்கு ஒரு எடையைச் சொன்னார்கள்.

"இதோடை சரியான எடை எனக்கும் தெரியாது. ஆனா என்னுடைய கேள்வி அதுவல்ல"

வாத்தியார் தொடர்ந்தார். "இதை அப்படியே நான் கையில் பிடித்துக் கொண்டிருந்தால் என்ன ஆகும்?"

"ஒன்றுமே ஆகாது சேர்"

"வெரிகுட். ஆனால் ஒரு மணி நேரம் இப்படியே படித்துக்கொண்டிருந்ததென்றால்?"

"உங்கடை கை மரத்துப்போடும் சார்"

"ஒருநாள் முழுக்க இப்படியே வெச்சிருந்தேனேறால்"

"உங்க கை அப்படியே மரத்துடும் சார்"

"வெரி வெரி குட். ஒரு மணி நேரத்திலே என் கை வலிக்கிறதுக்கும், ஒரு நாளிலே மரத்துப் போகிற அளவுக்கு மாறுறதுக்கும் இந்த டம்ப்ளரோட வெயிட் கூடிக்கொண்ட போகுமா என்ன?"

"இல்லை சேர். அது வந்து"

"எனக்கு கை வலிக்காமல், மரத்துடாமல் இருக்கவேணுமெண்டால் நான் செய்ய வேணும்

"கிளாஸை உடனே கீழே வைக்கவேணும் சேர்?

"எக்ஸாக்ட்லி. இந்த கிளாஸ்தான் பிரச்சினை. ஒரு பிரச்சினை நமக்கு வந்ததெண்டால் அதை அப்படியே மண்டைக்கு ஏத்தி ஒரு மணி நேரம் வைத்திருந்தோன் என்றால் வலிக்க ஆரம்பிக்கும். ஒரு நாள் முழுக்க அப்படியே வெச்சிருந்தால் மூளை செயலிழந்து மரத்துவிடும். அதனாலே உங்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்தால் தூக்கி ஒரு ஓரமா வைத்து விடுங்கோ அதுவே சரியாயிடும். சரியா?"

இது தான் மனவியல் ரீதியிலான தீர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரை மாறிபோச்சுது.....

**ஒரு** ஊரில், ஒருவன் தேவை இல்லாமல் வீண் கற்பனை செய்துக்கொண்டு, ஏதாவது உளறிக்கொண்டும், தன் நிம்மதியைத் தானே கெடுத்துக்கொண்டும் இருந்தான். அவன்

அப்படி இருப்பதால் அவனின் குடும்பத்தினருக்கும் கவலையாக இருந்தது. மருத்துவரிடம் அழைத்துச் சென்றார்கள்.

அவனைச் சோதித்துப் பார்த்த மருத்துவர்,

"எப்போதிலிருந்து தேவை இல்லாமல் இப்படி கவலையில் இருக்கிறீர்கள்" எனக் கேட்டார்.

"டொக்டர், நான் ஒரு பெரிய குதிரையை விழுங்கியதில் இருந்து இப்படி எனக்குள் ஏதோ ஒரு மாற்றம் உண்டானது" என்றான்.



"என்ன.? குதிரையை விழுங்கினீர்களா? என்ன சொல்கிறீர்கள்? அதெல்லாம் சாத்தியம் இல்லை." என்று மருத்துவர் எவ்வளவோ சொல்லியும் அந்த நபர் கேட்பதாக இல்லை.

சரி. இவன் போக்கிலேயே போக வேண்டியதுதான் என்று முடிவு செய்த மருத்துவர், அவனுக்கு மயக்க ஊசியைப் போட்டு, ஒரு மணிநேரம் படுக்க வைத்தார்.

அவனுக்கு மயக்கம் தெளிவதற்குள் ஒரு நிஜக் குதிரையைப் பிடித்து வந்து மருத்துவமனை வாசலில் கட்டி வைத்தார்.

அவனுக்கு மயக்கம் தெளிந்தது. உடனே மருத்துவர் அவனிடம், "உங்கள் வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்து, நீங்கள் விழுங்கிய குதிரையை வெளியே எடுத்துவிட்டேன்.

வாசலுக்குச் சென்று பாருங்கள் நீங்கள் விழுங்கிய குதிரை இருக்கிறது." என்றார்.

அவனும் வாசலுக்கு வந்து பார்த்தான். உடனே பதறி அடித்துக்கொண்டு மருத்துவரின் அறைக்கு ஓடி வந்தான்.



"அய்யோ டாக்டர், அது நான் விழுங்கிய குதிரை இல்லை.

நான் விழுங்கிய குதிரை கறுப்பு நிறம்.

நீங்கள் காட்டும் குதிரையோ வெள்ளை. அப்படி என்றால்..?

அய்யய்யோ என் வயிற்றில் இரண்டு குதிரைகள் இருந்திருக்கிறது. ஏன் நீங்கள் கறுப்புக் குதிரையை எடுக்கவில்லை? ஏதாவது பிரச்சனையா?" என கேட்க,

அதற்கு டொக்டர்,"என்னால முடியல்லை இன்றைக்கு ஆஸ்பத்திரி லீவு." என்று சொல்லி, வீட்டுக்குக் கிளம்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பக்கக் கதை

# "சீப்பு"



**முன்னொரு** காலத்தில் சீனாவில் ஒரு பெரிய வியாபாரி தனக்குப் பின் வியாபாரத்தைத் தன் மூன்று மகன்களில் யார் வசம் ஒப்படைப்பது என்று தீர்மானிக்க அவர்களுக்கு ஒரு போட்டி வைத்தான். யார் அதிக அளவு சீப்புகளை புத்த மடாலயத்திற்கு விற்கிறார்களோ அவன் தான் தன் வியாபாரத்தை நிர்வகிக்கத் தகுதியானவன் என்று அறிவித்தான்.

மொட்டை அடித்துள்ள புத்த பிக்குகளிடம் சீப்பு வியாபாரமா என்று மகன்கள் மூவரும் ஆரம்பத்தில் திகைத்தனர். ஒரு சீப்பைக் கூட விற்க முடியாதே என்று நினைத்தனர். ஆனால் பின்னர் மூவரும் முயற்சி எடுப்பது என்று முடிவு செய்தனர். அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த சில நாட்கள் அவகாசம் கொடுத்த அந்த வியாபாரி அது முடிந்தவுடன் மகன்களை அழைத்து அவர்கள் எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று கேட்டான்.

ஒரு மகன் சொன்னான். "நான் இரண்டு சீப்புகள் புத்த மடாலயத்திற்கு விற்றேன்"

வியாபாரி கேட்டான். "எப்படி?"

"புத்த பிக்குகளிடம் இந்தச் சீப்பை முதுகு சொறியவும் உபயோகிக்கலாம் என்று சொல்லிப் பார்த்தேன். இரண்டு புத்த பிக்குகளுக்கு அது சரியென்றுபட்டது. அதனால் அவர்கள் இருவரும் இரண்டு சீப்புகள் வாங்கினார்கள்"

இன்னொரு மகன் சொன்னான். "நான் பத்து சீப்புகள் விற்பனை செய்தேன்"

வியாபாரி ஆச்சரியத்துடன் கேட்டான். "எப்படி?"

"வழியெல்லாம் காற்று அதிகமாக உள்ளதால் மலை மேல் உள்ள அந்தப் புத்த மடாலயத்திற்குப் போபவர்கள் தலைமுடியெல்லாம் பெரும்பாலும் கலைந்து விடுகிறது. அப்படிக் கலைந்த தலைமுடியுடன் புத்தரைத் தரிசிக்கப் பக்தர்கள் செல்வது புத்தருக்குச் செய்யும் அவமரியாதையாகத் தோன்றுகிறது என்று புத்த மடாலயத்தில் சொன்னேன். ஒரு பெரிய கண்ணாடியும் சில சீப்புகளும் வைத்தால் அவர்கள் தங்கள் தலைமுடியைச் சரி செய்து கொண்டு புத்தரைத் தரிசிக்க செல்வது நன்றாக இருக்கும் என்ற ஆலோசனையும் சொன்னேன். ஒத்துக் கொண்டு பத்து சீப்புகள் வாங்கினார்கள்"

வியாபாரி அந்த மகனைப் பாராட்டினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமைக்கலாம் வாங்க

## செட்டிநாடு நண்டு வறுவல்

### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| நண்டு | – 5 |
| பெரிய வெங்காயம் | – 2 |
| பூண்டு | – 5 பல் |
| இஞ்சி | – 1 அங்குலத் துண்டு |
| தக்காளி | – 1 |
| சின்ன வெங்காயம் | – 50 கிராம் |
| சிவப்பு மிளகாய் | – 10 |
| சீரகம் | – 1 தேக்கரண்டி |
| தனியா | – 2 தேக்கரண்டி |
| நல்லெண்ணெய் | – 4 மேசைக்கரண்டி |
| உப்பு | – தேவையான அளவு |

### செய்முறை

1. நடுத்தரமான அளவு நண்டுகள் 5 எடுத்து ஓடு நீக்கி, சுத்தம் செய்து கொள்ளவும்.
2. இஞ்சி, பூண்டு, சிவப்பு மிளகாய், சின்ன வெங்காயம், சீரகம், தனியா ஆகியவற்றை நன்கு அரைத்துக் கொள்ளவும்.
3. பெரிய வெங்காயத்தை நீளவாக்கில் நறுக்கிக் கொள்ளவும். தக்காளியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
4. ஒரு அடி கனமான பாத்திரத்தில் நல்லெண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெங்காயம், தக்காளி, கறிவேப்பிலை போட்டு வதக்கவும்.
5. இத்துடன் அரைத்த மசாலாவையும் சேர்த்து பச்சை வாசனை போக நன்கு வதக்கிக் கொள்ளவும்.
6. இதனுடன் தேவையான அளவு தண்ணீர், உப்பு, மஞ்சள்தூள் சேர்க்கவும். தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தவுடன், நண்டுகளைப் போடவும்.
7. நண்டுகள் நன்கு வெந்து, வாசனை வந்த பின் இறக்கவும்.

## ஆம்லெட் மசாலா ரைஸ்

### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| அரிசி | ஒரு கப் (ரைஸ் குக்கர் கப்) |
| முட்டை | – 4 |
| வெங்காயம் | – 2 |
| தக்காளி | – ஒன்று |
| பிரியாணி மசாலா | – 2 1/2 தேக்கரண்டி |
| தயிர் | – 3 தேக்கரண்டி |
| மஞ்சள் தூள் | – கால் தேக்கரண்டி |
| மிளகுத் தூள் | – அரைத்தேக்கரண்டி |
| உப்பு | – தேவையான அளவு |

**தாளிக்க:**


| | |
|---|---|
| எண்ணெய் | – 2 மேசைக்கரண்டி |
| கறிவேப்பிலை | – சிறிது |
| கராம்பு | – 2 |

### செய்முறை

1. அரிசியை வேகவைத்து உதிரியாக வடித்து ஆறவிடவும். முட்டையுடன் உப்பு, மிளகுத் தூள், மஞ்சள் தூள் சேர்த்து அடித்து ஆம்லெட் போட்டு துண்டுகளாக்கி கொள் ளவும்.
2. வெங்காயம், தக்காளி ஆகியவற்றைப் பொடியாக நறுக்கி வைக்கவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் தாளிக்க வேண்டியவற்றைத் தாளித்து, வெங்காயம் சேர்த்து வதக்கவும்.
3. வெங்காயம் நிறம் மாறியதும் தக்காளி சேர்த்துக் கரையும் வரை நன்கு வதக்கவும் தக்காளி வதங்கியதும் பிரியாணி மசாலா, தயிர் மற்றும் உப்பு சேர்த்து எண்ணெய் பிரியும் வரை வதக்கவும்.
4. அதனுடன் ஆம்லெட் துண்டுகளைச் சேர்த்து, லேசாக தண்ணீர் தெளித்து முட்டையில் மசாலா சேரும் வரை வேகவிடவும்.
5. பின் சாதத்தைச் சேர்த்து நன்கு கிளறி விட்டுத் தூவி இறக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முதுகுப்பகுதி முழுவதும் காயங்களால் ஏற்பட்ட கொடூரமான தழும்புகளுடன் கருப்பினத்தவரான (ஆப்ரிக்க அமெரிக்கன்) கார்டன் (Gordon) அமர்ந்திருக்கும் இந்தப்படமே கருப்பினத்தவர்களின் மீதான அடக்கு முறையையும், அவர்களின் துயரத்தையும் உலகிற்கு உரக்கச் சொன்னது"



# அடிமை விலங்கொடித்த நாள்

சர்வதேச அடிமைத்தளை ஒழிப்பு தினம் (International Day for the Abolition of Slavery) ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் அறிவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 2 ம் தேதி கொண்டாடப்படும் தினம் ஆகும். இந்தத் தினம் முதன் முதலில் 1986 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அடிமை வணிகத்தையும் அதன் ஒழிப்பையும் நினைவூட்டும் பன்னாட்டு நாள் (International Day for the Remembrance of the Slave Trade and its Abolition) ஆண்டு தோறும் ஒகஸ்ட் 23 ம் திகதி கொண்டாடப்படுகிறது. இத்தினம் பற்றி யுனெஸ்கோவின் UNESCO 29வது கூட்டத் தொடரில் (29 C/40) பிரேரணையாக முன்வைக்கப்பட்டது. யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகத்தின் யூலை 29. 1998 ம் திகதி இடப்பட்ட CL/3494 இலக்க சுற்றறிக்கைப் படி நாடுகளின் கலாசார அமைச்சர்களினூடாக இது தொடர்பான அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. குறிப்பாக 1791 ஆகத்து 22ம் திகதி இரவும் ஆகஸ்ட் 23ம் திகதியும் தற்போதைய ஹெய்டியில் (island of Saint Domingue) இடம் பெற்ற அடிமை வியாபாரத்திற்கு எதிரான கிளர்ச்சியையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு கூரும் வகையிலேயே இத்தினம் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அடிமை முறை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களிலே இருந்தது. அடிமையால் எந்தப் பயனும் இல்லை என்றால் அவர் கொல்லப்படுவார். அல்லது ஆள் இல்லாத தீவில் கொண்டுசென்று விடப்படுவார். பெண்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதும், பாலியல் ரீதியாகப் பயன்படுத்துவதும் அடிமைமுறையின் ஒரு அங்கமாக இருந்தது. தொன்மையான நாகரிக நாடுகள் என வர்ணிக்கப்படும் கிரேக்கம், எகிப்தின் வளர்ச்சிக்கு அடிமைகளின் அயராத உழைப்பே காரணம். எகிப்தில் அடிமைகளை வைத்திருப்பதும் பரிசளிப்பதும் சமூக அஸ்தஸ்து. ஏதென்ஸ் நகரின் மக்கள் தொகை நாற்பதாயிரம் பேர் என்றால் அவர்களிடம் இருந்த அடிமைகளின் எண்ணிக்கை எண்பதாயிரம். அடிமைகள் தங்களுக்கு விருப்பப்பட்ட பெயரை வைத்துக்கொள்வது கூட குற்றம். எஜமானர் தான் பெயர் வைப்பார்.

முதுகுப்பகுதிமுழுவதும்காயங்களால்ஏற்பட்டகொடூரமானதழும்புகளுடன்கருப்பினத்தவரான(ஆப்ரிக்கஅமெரிக்கன்)கார்டன்(Gordon)அமர்ந்திருக்கும் இந்தப்படமே கருப்பினத்தவர்களின் மீதான அடக்கு முறையையும், அவர்களின் துயரத்தையும் உலகிற்கு உரக்கச் சொன்னது. அடிமைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இரண்டாகப் பிரியவிருந்த ஐக்கிய அமெரிக்காவைப் பாதுகாக்க, பிரிவினைவாத தென் மாநிலங்களுக்கு எதிராக ஆபிரகாம் லிங்கனின் தலைமையில் உள்நாட்டுப் போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்த நேரம். அமெரிக்க வெள்ளையர்களின் நிறவெறிக் கொடுமையின் தீவிரத்தை பார்ப்பவர்களுக்கு பட்டென பார்த்த மாத்திரத்திலேயே உணரச் செய்யும் இந்தப் புகைப்படம், 1863 ஏப்ரல் 2ம் தேதி வில்லியம் டி.மெக் பெர்சன் மற்றும் அவரது இணையரான ஆலிவர் (William D. McPherson, Oliver) என்ற புகைப்படக்காரர்களால் எடுக்கப்பட்டது.

நிற வேற்றுமையின் காரணமாக கருப்பினத்தவர்கள் மீதான அமெரிக்க வெள்ளையர்களின் அடக்குமுறை ஓங்கியிருந்த காலகட்டத்தில், அதனையும், அடிமை முறையையும் கடுமையாக எதிர்த்த ஆபிரகாம் லிங்கன், 1856-ல் புதியதாக உருவாக்கப்பட்ட குடியரசுக் கட்சியில் சேர்ந்தார். 1858-ல் இலினாய்ஸ் (Illinois) என்ற இடத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் இவர் ஆற்றிய உரையில் “அடிமைத்தனம் என்பது அடிப்படையில் மட்டுமல்லாமல் தார்மீக மற்றும் சமூக அரசியலிலும் தவறான ஒரு செயல். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதற்காக அமெரிக்காவின் கொள்கை மாற்றத்தை உருவாக்குவதோடு ஒட்டு மொத்த அடிமைத்தனத்தையும் அமெரிக்காவில் ஒழிப்போம்” என்றார். லிங்கனின் இந்த பேச்சு தான் தென் மாநிலங்களில் கருப்பின மக்களை அடிமைகளை வைத்து வேலை வாங்கிக் கொண்டிருந்த வெள்ளைக்கார முதலாளிகளைக் கோபமடையச் செய்தது. அதே சமயம் 1860-ல் குடியரசுக் கட்சியின் சார்பாக ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்டார் லிங்கன்.

தேர்தலில் லிங்கன் வெற்றி பெற்றுவிட்டால் கருப்பர்களுக்கு விடுதலை கிடைத்துவிடும் என்று நினைத்த 11 தென் மாநிலங்கள், 1861 பெப்ரவரி மாதம் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பிரிவதாக அதிகாரபூர்வமாக அறிவித்தது. இதில் அலபாமா, ஃப்ளோரிடா, ஜோர்ஜியா, லூசியானா, மிசிசிப்பி, தெற்கு கரோலினா, டெக்சாஸ் (Alabama, Florida>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Georgia, Louisiana, Mississippi, South Carolina and Texas) போன்ற மாநிலங்கள் முதலில் வெளியே வர அர்கன்சாஸ், வட கரோலினா, டென்னசீ, வர்ஜினியா (Arkansas, North Carolina, Tennessee and Virginia) போன்ற மாநிலங்கள் பின்னர் அதனுடன் இணைந்து கன்ஃபடரேட் ஸ்டேட் ஆப் அமெரிக்கா (Confederate State of America ) என்ற புதிய அரசை உருவாக்கின. இதைத்தொடர்ந்து தேர்தலில் லிங்கன் வெற்றி பெற்றவுடனேயே 1861 ஏப்ரல் 12-ம் தேதி தென் மாநிலங்கள் வடக்குப் பகுதியின் மீது போர் தொடுத்ததால், லிங்கனின் யூனியன் படையும் (Union Force), தென் மாநிலங்களின் கன்ஃபடரேட் படையும் (Confederate forces) மோத உள்நாட்டுப் போர் தொடங்கியது.

இந்த சூழலில்தான் இந்தப் புகைப்படத்தில் இருக்கும் கார்டன் (எ) சாட்டையடி பீட்டர் (Gordon, or Whipped Peter), மிசிசிப்பி (Mississippi) மாநிலத்தில் ஜான் மற்றும் ப்ரிட்ஜெட் லயான்ஸ் (John and Bridget Lyons) என்ற வெள்ளைக்கார முதலாளிகளுக்கு சொந்தமான பருத்தித் தோட்டத்தில் இருந்து தப்பித்துவிடுகிறார். சுமார் 3000 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இந்தத் தோட்டத்தில், 1860-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 64 அடிமைகள் வேலை செய்து வந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. கார்டன் தப்பித்ததை தெரிந்து கொண்ட முதலாளிகள் மான் வேட்டைக்குப் பயன்படுத்தும் ப்ளட் ஹௌண்ட்ஸ் (bloodhounds) வகை மோப்ப நாய்களைக் கொண்டு தேட ஆரம்பிக்கிறார்கள். வெங்காயத்தை உடலில் தேய்த்துக் கொண்டால் வேட்டை நாயால் கண்டுபிடிக்க முடியாது என்பதை அறிந்து இந்த தேடுதல் உத்தியை முன்னரே ஊகித்த கார்டன் தப்பிக்கும் முன்பே வெங்காயத்தை எடுத்து வைத்துக் கொண்டார். ஒவ்வொரு முறை தண்ணீரில் விழுந்து எழுந்து ஓடும்போதும் தனது உடலில் வெங்காயத்தைத் தேய்த்துக் கொண்டு ஓட ஆரம்பித்தார். சுமார் நாற்பது மைல் தூரத்திற்குத் தொடர்ந்து நடந்தே சென்றவர், பத்து நாட்களுக்குப் பிறகு உடைகள் கிழிந்து, சேறும் சகதியுமாக உடல் முழுவதும் காயங்களுடன் லிங்கனின் யூனியன் படைச் சிப்பாய்கள் தங்கியிருந்த முகாமில் சென்று தஞ்சமடைந்தார். அதே காலகட்டத்தில்தான் ""ஆப்ரிக்காவில் இருந்து வந்து அமெரிக்க முதலாளிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தில் வேலை பார்க்கும் கறுப்பினத்தவர்கள் யூனியன் படையில் சேரலாம்" என்று லிங்கன் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து கார்டன் அந்தப் படையில் சேர முடிவெடுத்தார்.

யூனியன் படை வீரர்கள் தங்கியிருந்த கூடாரத்தின் உள் வளாகத்தில் ஒரு காலை நேரம். படையில் புதியதாக சேரச் வந்திருக்கும் ஒவ்வொரு வீரருக்கும் மருத்துவப் பரிசோதனைகளை மும்முரமாகச் செய்து கொண்டிருந்தனர் மருத்துவர்கள். அந்த அறையின் உள்ளே தயங்கியபடியே சென்ற கார்டன் மருத்துவர்கள் கட்டளையின்படி சட்டையைக்கழட்டிவிட்டு நிற்கிறார். அப்போது அவரின் முதுகுப் பகுதி முழுவதும் கொடூரமாக இருந்த தழும்புகளைப் பார்த்து அதிர்ந்து போனார்கள் மருத்துவர்கள். பின்னர் அவரிடம் அதைப்பற்றி கேட்க, அமெரிக்க முதலாளிகளிடம் தான் வேலை செய்து கொண்டிருந்தபோது அவர்கள் சாட்டையாலும், இடுப்பில் அணியும் பெல்ட்டினாலும் அடித்ததால் ஏற்பட்ட காயங்களின் தழும்புகள்தான் என்று கார்டன் சொல்ல, மீண்டும் அதிர்ச்சியின் உச்சத்துக்கே சென்றனர் மருத்துவர்கள். அடுத்த சில விநாடிகளில் யூனியன் படைப் பிரிவு முழுவதுக்கும் பரபரப்புச் செய்தியானார் கார்டன்.

அப்போது அந்த முகாமில் அமைந்திருந்த ஒரு பகுதியில்தான் புகைப்படக்காரர்கள் வில்லியம் டி.பெர்சன், ஆலிவர் ஆகியோர் ஒரு கலைக்கூடத்தை திறந்திருந்தார்கள் என்பதால் அங்கே நடந்த உள்நாட்டுக் கலவரத்தை அதிகளவில் படம் எடுத்துக் கொண்டிருந்தனர். காட்டுத் தீயாகப் பரவிய கார்டன் பற்றிய தகவல் அந்த முகாமில் இருந்த டி.பெர்சன், ஆலிவர் காதுகளுக்கும் சென்றது. உடனே இவர்கள் இருவரும் கார்டனைச் சந்தித்து அவரைப் புகைப்படம் எடுக்கக் கேட்டுக் கொண்டனர். அதற்கு கார்டனும் மறுப்பேதும் சொல்லாமல் ஒத்துக் கொண்டதால் அவரின் முதுகு தெரியுமாறு அமர வைத்து புகைப்படம் எடுத்து முடித்தார்கள். பின்னர் "கார்ட் டி விஸ்தா" (carte-de-visite) என்ற முறையில் சுமார் ஒரு லட்சம் பிரதி வரை அதனை அச்சிட்டு செய்து அமெரிக்கா முழுவதும் விநியோகிக்கப்பட, பற்றிக் கொண்டு எரிய ஆரம்பித்த இந்த விவகாரம் லிங்கனின் நிலைப்பாட்டுக்கு மேலும் கூடுதல் வலுவைச் சேர்த்தது.

""வெள்ளைக்கார முதலாளிகளிடம் வேலை பார்த்த கறுப்பின மக்கள் சரியாக வேலை செய்யவில்லை என்றால், அவர்களை நிர்வாணப்படுத்தி தோலால் அடித்துத் தண்டிக்கும் முறைதான் அதிகம். மேலும், அவர்கள் முதுகில் ரம்பத்தால் குத்தி, அதில் காயமடைந்து சீழ் பிடித்து வீங்கியவுடன் அதனை அதே ரம்பத்தால் அறுப்பார்கள். அதன்பிறகு அனைத்து அடிமைகளுக்கும் தெரிவது போல நிற்க வைத்து அவரைச் சுற்றி சோளத்தைப் போட்டு எரிய விடுவார்கள். அதன்பின் எரிந்து முடிந்த அதே மக்கா சோளத்தாலேயே காயம் பட்ட இடத்தை மட்டுமல்லாமல், மொத்த உடலிலும் காயமாகும் வரை அடிப்பார்கள். தப்பித்து ஓட முயற்சி செய்து பிடிபடுபவர்களுக்குக் கொடுக்கும் தண்டனை இதைவிடக் கொடுமையானது.

ஒரு ஆள் உட்காரும் அளவிற்கு குழி வெட்டி அதில் தப்பி ஓடியவரை நிர்வாணமாக உட்கார வைத்து, அவரின் மேல் பச்சை விறகுக் குச்சிகளை வைத்து எரிய வைத்து விடுவார்கள். ஒருவேளை அதிலிருந்து மீண்டு வந்தாலும் அவர்களால் நடக்கவே முடியாது. அதையும் தாண்டி அவர்கள் உயிர் பிழைத்தால், மீண்டும் தப்பி ஓட முயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாமல் வேலை செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். என்னையும் இப்படி அடித்ததில் இரண்டு மாதங்கள் படுத்த படுக்கையாகவே கிடந்தேன். அதிலிருந்து மீண்டு மறுபடியும் வேலை செய்யும்போதுதான் என் முதலாளி அடிக்க ஆரம்பித்தார். அதனால்தான் அங்கிருந்து தப்பித்தேன்'' என கார்டன் பதிவு செய்திருப்பதை வரலாற்றுப் பதிவாளர்களும் உறுதி செய்திருக்கின்றனர்.



1863-ல் ஹார்பர்ஸ் வீக்லி (Harper's weekly) என்ற பத்திரிகை இந்தப் புகைப்படத்துடன் கார்டன் தப்பித்த விவரங்களைக் கொண்ட கட்டுரையின் மூலம் மனித குலத்தின் தழும்பாய் போன அடிமைத்தனத்தினது ஆறாத ரண வலியை "வழக்கமான நீக்ரோ" (A Typical Negro) என தலைப்பிட்டு அழுத்தமாக உலகத்திற்கு கொண்டு சேர்த்தது. மேலும், இப்புகைப்படக் கட்டுரையும், யூனியன் படை வீரராக பேட்டன் ரோக்கில் சிறப்பாக பணியாற்றிய கார்டனும், சுமார் இரண்டு லட்சம் ஆப்ரிக்க கருப்பின மக்கள் அந்தப் படையில் சேரக் காரணங்களாக அமைந்தன என்கிறது வரலாற்றுப் பதிவுகள்.

கணிசமான கறுப்பின வீரர்களைக் கொண்ட யூனியன் படை பங்கேற்ற உள்நாட்டுப் போர், சுமார் எட்டரை லட்சம் பேர் பலியான பின்னர் 1865 மே 9-ல் முடிவுக்கு வந்ததையடுத்து, காட்சிப்படுத்தப்பட்ட அந்த முதுகுத் தழும்புகள் வெள்ளையர்களின் நிறவெறிக்கு எதிரான புரட்சியாக வெடித்து கறுப்பின அடிமைத்தனத்திற்கு முற்றுப்புள்ளியாகவும் மாறியது. சட்டப்படி ஆபிரிக்கர்கள் அடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் வெள்ளை இனத்தைச் சேர்ந்த இனவெறியர்கள் அவர்களைச் சுதந்திர மனிதர்களாக வாழ விடவில்லை. இந்த கறுப்பினத்தவர்களுக்கு எத்தகைய உரிமைகளும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் கறுப்பினத்தவருக்கெதிராக 1965 ஆம் ஆண்டு வரை அமுலில் இருந்த எல்லாத் தடைகளையும் நீக்கி முதல் முதலாக அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜோன்ஸன் ஆபிரிக்கர்களுக்கு நிபந்தனையற்ற வாக்குரிமையை வழங்கினார்.

அன்றிலிருந்து நீக்ரோக்கள் என்று அழைக்கப்பட்டு வந்த, ஆபிரிக்காவிலிருந்து அடிமைக ளாகக் கொண்டுவரப்பட்டவர்களின் சந்ததிகள் ஆபிரிக்க அமெரிக்கர்கள் என்று அழைக்கப்படலாயினர். அவர்களுக்கென்றிருந்த தனிப் பள்ளிகள், தனிக் கோவில்கள், தனிப் பொழுதுபோக்கு இடங்கள் என்பதெல்லாம் மெதுவாக மறையத் தொடங்கின. கறுப்பினத்தவர்கள் வாக்குரிமை பெற்று ஐம்பத்தைந்து ஆண்டுகள் நிறைவடையும் வேளையில் ஒரு கறுப்பினத்தவரான பராக் ஒபாமா ஜனாதிபதியாகக் கூடிய அளவிற்கு கறுப்பினத்தவர்கள் இன்று உரிமைகளைப் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தனது 125 ஆண்டுச் சேவையினை நினைவு கூரும் வரும் இவ்வேளை அவுஸ்திரேலியா சிட்னி யா.இ.க பழைய மாணவர் சங்கத்தினர் 'கல்வி எங்கள் மூலதனம்' என்ற கருப்பொருளில் ஆற்றிய செயலமர்வில் பெறப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு இங்கு தரப்படுகின்றது.



கலாநிதி தி.கமலநாதன்

# கல்வி-எங்கள்-மூலதனம்

*மேற்படி கருப்பொருளில் **20.03.2015** அன்று அவுஸ்திரேலியா, சிட்னி, பெண்டில்ஹில் யாழ் மண்டபத்தில் சிட்னி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் கருத்தரங்கு ஒன்றை கல்விக்குழு தலைவர் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் யா.இ.க. சிட்னி ப.மா.ச தலைவர் திரு.கு.பார்த்தீபன் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்து நடத்தியது.*

**எமது** தாய் மண்ணில் அண்மைக்காலமாகக் கல்வியில் ஏற்பட்ட தளம்பல் நிலையையும் பின்னடைவையும் கருத்திற் கொண்டு அந்நிலை மாற புலம் பெயர்ந்த எம்மால் யாது செய்ய முடியுமென ஆராயும் நோக்கில் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

கல்விக்குழுத் தலைவர் தனது உரையில், எமது தாய் மண்ணில், கல்வியுடன் எமது பண்பாடு, கலாசாரம் ஆகியனவும் நலிவடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டி கல்வியில் திறமைக்கு முன்னிலை கொடுத்து தரப்படுத்தலை வெறுத்தெதிர்த்த நாம் இன்று அதை நோக்கிய நகர்வை கொண்டியங்கும் துர்ப்பாக்கியத்தினை விளக்கிக், கல்வி நலிவுக்கான உண்மைக்காரணிகளைக் கண்டறிந்து பரிகாரம் தேட வேண்டும் என்றார். வெறும் கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பதோ அல்லது கணனிகள் சில அனுப்புவதோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு வகையில் பணஉதவி செய்வதோ பரிகாரமாக அமையாது. நோய்க்கான உண்மைக்காரணி அறிந்து உதவுவதே சிறந்தது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யா.இ.க சிட்னி ப.மா.ச தலைவர் தனதுரையில், கல்வியே எங்கள் மூலதனம். கல்வியே எங்கள் மூச்சு, கல்வியில் நாம் இழந்ததைப் பெற்றுயர்ந்திட நாம் அனைவரும் எம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும். எமது கல்வியின் தற்போதைய உண்மை நிலை அறிய களத்தில் இருந்து கல்வியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரிடமிருந்து கருத்துக்களைப் பெற இன்று ஏற்பாடுகள் செய்துள்ளோம். அவற்றில் இருந்து தெளிவைப் பெற்றுக் கொள்வோம். இதற்காக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இன்று ஓர் விதையை இட்டுள்ளது. அது உங்கள் மூலம் பரவி பெரு விருட்சமாகி எம் மண்ணுக்கு கல்வியில் நல்ல பயன் தர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என்றார்.

களத்தில் இருந்து உண்மை நிலை அறியும் நோக்கில் அங்கிருந்து கருத்துக்கள் பெறப்பட்டன.

**பேராதனைப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி றொஷான் நாகல் அவர்கள்.**

வட பிரதேச மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் அண்மைக்காலப் போக்கு வீழ்ச்சியடைந்து சென்ற பாங்கினை வரைபடங்கள், புள்ளிவிபரங்கள் உதவியுடன் விளக்கினார். அவற்றைத் திரையில் ஒளி வீசிக் காண்பித்தார்கள். பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர் தொடர்பில் பாரிய வீழ்ச்சி அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இந்த வீழ்ச்சிக்குக் காரணம் யாவையென பின்வருவோரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துக்கள் பெறப்பட்டன.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு.ஐ.தயானந்தராசா அவர்கள்**

எமது கல்வித்தரத்தில் தற்போது ஒரு தாழ்வு நிலை காணப்படுவது உண்மையே. காரணங்கள்.........

- ♣ கல்வியின் நான்கு தூண்களான அதிபர், ஆசிரியர், பெற்றோர், மாணவர் ஆகியோரிடையே சுமூகமான ஒருங்கிசைவு மட்டுப்பாடாகவுள்ளது.
- ♣ பல்வேறு புறச்சூழல்கள் கவனக்கலைப்பான்கள் காரணமாக மாணவரிடையே ஒருவாறான அமைதியின்மை காணப்படுகின்றது. அது கல்வியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்துகின்றது.
- ♣ பாடசாலைத் தலைவர் - அதிபர் பணிகளில் பல ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. அவர்கள் தமது கடமை நேரத்தின் பெரும் பகுதியினை மேசையிலிருந்து ஆற்றும் (Paper Works) வகையிலேயே ஏற்பாடுகள் அமைகின்றன. அது மட்டுப்படுத்தப்பட வேண்டும். அவர்களும் கற்றல், கற்பித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளில் சில மணி நேரமாவது தினசரி ஈடுபட்டு அங்குள்ள குறை நிறைகளை அறிந்து கொள்ள வேண்டும்.

- ஆசிரிய பணி மகத்தானதும் புனிதமானதும் ஆகும். அவர்கள் தமது பணிகளில் முழுமையான (100%) பங்கினை ஆற்ற வேண்டும்.

- பட்டதாரி ஆசிரியர்கள் உரிய முறையில் கற்பித்தல் பயிற்சி பெற்ற பின்னரே வகுப்பறை செல்ல அனுமதிக்க வேண்டும்.

- கல்வியில் பொறுப்புக் கூறலில் பெரும் தடுமாற்றம் காணப்படுகின்றது. பாடசாலைகள் பிரத்தியேகக் கல்வி நிறுவனங்களிலும் அவை பாடசாலைகளிலும் தத்தமது பொறுப்புக்களை தரவேற்றம் செய்யும் மனப்பாங்கு காணப்படுகின்றது. அது தவிர்க்கப்பட்டு கல்வியுலகில் பங்குதாரர்கள் ஒவ்வொருவரும் பொறுப்புணர்ந்து தமது கடமைகளைச் செய்தால் நன்மைபயக்கும்.

- பாடசாலை நேரத்தில் நடைபெறும் பிரத்தியேக வகுப்புக்களால் ஒழுக்கம் தடுமாறுவதுடன் கல்விக்கான நேரமும் குறைவடைகின்றது. இவ்விடயத்தில் ஆரோக்கியமான மாற்றங்கள் அவசியம்.

- புலம் பெயர்ந்து வாழும் உறவுகளால் அன்புரிமையுடன் தமது இரத்த உறவுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் பணம் பல்வேறு கவனக் கலைப்பான் களுக்குக் காரணமாகின்றன.

- போதைப்பொருள் பாவனை பெரும் பிரச்சினையாகவுள்ளது. இதிலிருந்து பாதுகாப்புத் தேவை. பெற்றோரும், சமூகமும் இதில் கூடிய கவனம் கொள்ளல் காலத்தின் தேவையாகும்.

- இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பல தடைகளால் தடுமாற்றம் காண்கின்றது. அவை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- மாணவர்களிடம் முற்றாக அருகிவிட்ட வாசிப்புப் பழக்கம் மீள்வலிமை பெற அவ்வழி ஊக்குவிப்பு அவசியம்.

- எங்களது தனித்துவமான பண்பாடு, பழக்கவழக்கங்கள், பாரம்பரிய நடைமுறைகள் அருகி வருகின்றன. அவற்றை இறுகப் பேண செயற்றிட்டங்கள் அவசியம்.

- கல்விக்குக் கண்டிப்பு அவசியம். கல்வியுலகில் அது தற்போது நிலைகுலைந்து காணப்படுகின்றமை கவலை தருகின்றது. கல்வியுலகின் பங்குதாரர்களும், சமூகமும் இதில் கவனம் கொள்ளல் வேண்டும். சிறப்பாகப் பெற்றோர் பங்கு இவ்விடயத்தில் மேன்மையானது. தாய் தந்தை இவ்விடயத்தில் சமபங்கு கொண்டவர்கள். ஆனால் தந்தைமார் தற்போது தமது கடமைகளைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறந்தள்ளுகின்றனரோ என்று ஐயங்கொள்ளத் தோன்றுகின்றது. பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் ஒழுங்கு செய்தால் அங்கு வருபவர்களில் 75% தாய்மார்களே. அவர்களின் ஆர்வத்தைப் பாராட்டுகின்றேன். ஆனால் எல்லாத் தாய்மார்களாலும் கண்டிப்புடன் பிள்ளைகளைக் கல்வியில் அக்கறை கொள்ள வைக்க எமது குடும்ப அமைப்பில் முடியுமா? என்று சிந்திக்கின்றேன்

- கல்வியில் தந்தையின் அதிகூடிய கவனமும் கண்டிப்பும் நெறிப்படுத்தலும் அவசியம்.

**சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு.ந.சர்வேஸ்வரன் அவர்க**

- சாவகச்சேரிப் பிரதேசம் தற்போதுதான் யுத்தத்தின் பின்னர் ஓரளவு இயல்பு நிலைக்கு வந்து பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன.
- பல பாடசாலைகளில் வளப் பற்றாக்குறை காணப்படுகின்றது.
- எமது பிரதேசத்தில் பல்வேறு கலாச்சார சீரழிவுகள் காணப்படுகின்றன. மாணவரிடையே அமைதியின்மை காணப்படுகின்றது. கவனக் கலைப்பான்கள் மாணவர் கல்வியைப் பாதிக்கின்றன.
- மாணவர்களுக்குச் சரியான வழிகாட்டிகள் தேவைப்படுகின்றனர்.
- விடுதி வசதியுடைய பாடசாலைகள் எதுவும் எமது பிரதேசத்தில் இல்லை. அவ்வாறு ஒன்றை ஏற்பாடு செய்தால் போக்குவரத்துப் பிரச்சினைகள் உடைய மாணவர்கள் அங்கு தங்கிக் கல்வியைத் தொடர முடியும்.
- பாடசாலை வளப் பற்றாக்குறை நிவர்த்திக்கப்படுவதுடன் அவை நவீனமயப்படுத் தப்படல் வேண்டும்.
- விளையாட்டுத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- சீரழிந்து போகும் எமது பண்பாடு கலாச்சார மேம்பாட்டுக்குச் சீரிய முறையிலான வேலைத்திட்டங்கள் அவசியம்.

**யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் அவர்கள்**

- மாணவர் தொகை அதிகரித்துள்ளது. அதற்கேற்ப வகுப்பறை வசதிகள் போதாது. அவற்றின் அளவுப் பரிமாணமும் மாறாதிருப்பதால் சிரமமுள்ளது.
- பாடசாலையின் மொத்த பிரதேச அளவும் மாற்றமடைய முடியாதுள்ளதால் இட நெருக்கடி நிலை காணப்படுகின்றது.
- விளையாட்டுத்துறையிலும் அவ்வாறே. இடவசதியில்லை. உரிய உபகரணங்களும் இல்லை. இதனால் மாணவர்களுக்குத் தகுந்த உடற் பயிற்சி வழங்க முடியாததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் உடல் உள ஆரோக்கியம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

♣ எங்கள் கல்லூரியைப் பொறுத்த வரை கல்வி வீழ்ச்சி அடைந்துள்ளதாகக் கூறமுடியாது.

**மூத்த கல்வியியலாளர் பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள்..**

தமிழர் கல்வி பல்வேறு பிரச்சினைகளுடதான் தற்போது இயங்கிக் கொண்டு உள்ளது. அதில் இப்போது வேகமாக வளர்ந்து வருவது 'School Centered Egoism' என்று கூறலாம். அதாவது பள்ளிக்கூடத்தை மையமாகக் கொண்ட 'தன் முனைப்பு ஓங்கல் வாதம்' என்பது அது.

இது பெரிய பள்ளிக்கூடங்களில் தொடங்கி இன்று கிராமப் பள்ளிக்கூடங்கள் வன்னிப் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றிலும் பரவிக் கொண்டு வருகின்றது. அதாவது ஒரு பள்ளிக்கூடத்துக்கு அதிபரை நியமிக்கும் போது திறமை அங்கு கவனிக்கப்படுவதில்லை. அந்தப் பள்ளிக்கூடத்தின் பழைய மாணவராக இருத்தல் வேண்டும். பெரிய பள்ளிக்கூடங்களைப் பார்த்து கிராமப் பள்ளிக்கூடங்களும் வன்னியில் உள்ள பள்ளிக்கூடங்களும் இந்த Model ஐ - இந்த மாதிரியைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன.

முற்காலத்திலும் சரி இடைக்காலத்திலும் சரி எமது கல்வி வளர்ந்ததற்கு ஒரு காரணம் எல்லா ஆசிரியர்களையும் தமிழர்களாகத்தான் பார்த்தார்கள். அவர்களைத் தமிழ்த் தேசியத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்றே பார்த்தார்கள். இப்போது குறுகிய மனப்பான்மை எமது கல்வியில் எல்லா நிலைகளிலும் ஊடுருவிக் கொண்டு வருகின்றது. இந்த ஊடுருவலுக்குப் பெரிய பள்ளிக்கூடங்கள் ஒரு முன்னோடியாக இருந்திருக்கின்றன என்பது முதலாவது. (நான் கூறுவதில் ஏதாவது கேள்விகள் கேட்க வேண்டி இருந்தால் கேட்கலாம்).

இரண்டாவது இந்த வன்னிப் பள்ளிக்கூடங்களில் பல பின்னடைவுகள் உள்ளன. யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்களிலும் சிறப்பாகப் பெரிய பள்ளிக்கூடங்களிலும் பல பின்னடைவுகள் உள்ளன. கெட்டிக்காரப் பிள்ளைகளை எல்லாம் பெரிய பாடசாலைகள் எடுக்கின்றன. அங்கெல்லாம் சரியான கற்றல் கற்பித்தல் நடைபெறாததால் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து அங்கு வரும் பிள்ளைகளில் சிலர் க.பொ.த (சா.த) பரீட்சையில் All-F எடுக்கின்றார்கள். இதனை எமது மாணவர் ஒருவர் புள்ளி விபரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது பெரிய பள்ளிக்கூடங்களில் கூட கற்றல் கற்பித்தல் முறையாக நடைபெறுவதில்லை.

இதற்கு வேறு சில உதாரணங்களையும் கூறுவேன். இந்த வன்னிப் பள்ளிக் கூடங்களுக்கும் ஏனைய பல பள்ளிக்கூடங்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம் மூலம் பள்ளிக்கூட முகப்பைப் பூசி வெள்ளை அடிப்பதிலும் காட்சிப்படுத்துவதிலும் இதைக் காட்டி வெளிநாட்டில் இருந்து வருபவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிப்படுத்துவதிலும் அத்துடன் கணனி அறைகளை அமைப்பதிலுந்தான் கவனம் செலுத்துகின்றார்கள். இவற்றிலும் பார்க்க முக்கியமானது எந்தப் பள்ளிக் கூடமாக இருந்தாலும் Teaching and Learning – அதாவது கற்பித்தலும் கற்றலுந்தான் முக்கியம் அதை நாங்கள் முன்னெடுக்க வேண்டும்.

மற்றும் வேறு பிரச்சினைகள் என்னவென்றால் ஒன்று தகுதியான ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிப்பதற்கு இல்லாமல் இருப்பதாகும். இந்த நிலைமையினை நாங்கள் கையாள வேண்டுமென்றால் சனி, ஞாயிறு நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் தகுதியான திறமைமிக்க ஆசிரியர்களைக் கொண்டு – பல்கலைக்கழகங்களில் படித்து வந்த அல்லது கல்வியியற் கல்லூரிகளில் படித்து வந்த தரமான ஆற்றல் மிக்க ஆசிரியர்களைக் கொண்டு அந்தப் பிள்ளைகளுக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் பணத்தைப் பயன்படுத்தித் தரமான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவையுண்டு.

கட்டடங்கள் அல்ல கல்வியைத் தீர்மானிப்பது. உண்மையான கற்றல் கற்பித்தல் நிகழ வேண்டும். ஆகவே வெளிநாடுகளில் இருந்து பள்ளிக்கூடங்களுக்கு கிடைக்கும் பணத்தை, உரிய முறையில் பயன்படுத்த விடுமுறை தினங்களில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் நடைமுறையில் சாத்தியப்படக்கூடிய விடயம். எதிர்பார்க்கும் பெறுபேற்றினையும் எட்டலாம். கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே அந்தப் பொறுப்பைக் கொடுத்து முன்னேற்றத்தைப் பெற்றுத்தரும்படி கேட்கலாம்.

மற்றது பொது வினாத்தாள் என்று கூறப்படும் பொது அறிவு என்ற விடயத்திலும் எமது தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர், முஸ்லிம் மாணவர்களுடன் ஒப்பிடும்போது சரியாகப் பின்தங்கியுள்ளார்கள். இதனால் பொதுவான போட்டிப் பரீட்சைகளில் உத்தியோகத்துக்கான போட்டிப் பரீட்சைகளில் வெகுவான பின்னடைவு காணப்படுகின்றது. இதையும் நாம் சரியான முறையில் கையாளாவிட்டால் தொழில் பெறுவதிலும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். ஏனென்றால் இங்கு பொதுவான வினாப்பத்திரத் தாள் சிங்கள மாணவர்களுக்கும் கொடுக்கப்படுகின்றது. தமிழ் மாணவர்களுக்கும் கொடுக்கப்படுகின்றது. இதில் பொதுஅறிவு, உலக அறிவு - இவை பற்றிய அறிவு இல்லாவிட்டால் அந்த வினாப்பத்திரத்தில் புள்ளிகள் எடுக்க முடியாது. ஒரு தொழிலுக்குள்ளும் நுழைய முடியாது. பள்ளிக்கூட ஆசிரியர்கள், தனியார் கல்வி ஆசிரியர்கள் பலர் தங்களது Notes ஐப் படித்தால் போதும். வேறொன்றும் நீங்கள் கற்க வேண்டாம் என்று கூறுகின்றார்கள். ஒரு ஆபத்தான நிலைமை எங்கள் தமிழ் பகுதிகளில் நடந்து கொண்டிருக்கின்றது. அதாவது இதைப் படித்தால் நீங்கள் சித்தியடையலாம் என்று கூறுவது. பெரிய பள்ளிக்கூடங்கள் தான் இதனை மாற்ற வேண்டும். அவை முதலில் ஆரம்பித்தால் ஏனைய பள்ளிக்கூடங்கள் அதனைப் பின்பற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவு வளர்க்கப்படல் வேண்டும். பொது வாசிப்பு வளர்ந்தால் அறிவு, திறன் எல்லாம் படிப்படியாக வளர்ந்து செல்லும். இதற்கு ஏதாவது செய்ய வேண்டும். அது காலத்தின் தேவையாகவுள்ளது. இதை வளர்ப்பதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நேரத்தில் அல்லது சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் ஏற்பாடுகளைச் செய்ய முனைதல் வேண்டும்.

உங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கின்றேன். கடந்த தடவை நடைபெற்ற ஸ்ரீலங்கா நிர்வாக சேவைப் பரீட்சையில் (S.L.A.S) 200 சிங்கள மாணவர்களும் 2 தமிழ் மாணவர்களும் சித்தி பெற்றுள்ளார்கள். இதை நாம் சிந்தனையில் கொள்ள வேண்டும். இங்கே இதற்குக் காரணம் என்னவெனில் தமிழ் மாணவர் பொது அறிவு வினாப்பத்திரத்தில் புள்ளிகள் பெறமுடியாது போனதேயன்றி வேறெதுவுமில்லை.

இன்னுமொன்று மாணவர்களுக்கு Serious Reading மிக அவசியம் என்பதை எமது கல்வி உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும். வாசிப்பதனால்தான் பொது அறிவை வளர்த்துக் கொள்ளலாம். அத்துடன் இப்போ எல்லாப் பரீட்சைகளிலும் 'கிரகித்தல்' என்பது பொதுவானதாக உள்ளது. கனதியான விடயங்களை வாசித்து விளங்கும் பழக்கம் எமது மாணவர்களுக்குக் குறைந்து சென்றுள்ளது. கிரகித்தல் வினாத்தாளில் கனதியான பந்திகள்தான் கொடுப்பார்கள். பின்பு அதில் வினாக்களைக் கேட்பார்கள். அப்போது கனதியான பந்திகளை வாசித்துக் கிரகிக்கும் பயிற்சி இல்லாவிட்டால் S.L.A.S, S.L.E.A.S, Clerical பரீட்சைகளில் மாத்திரமல்ல வேறு எந்தச் சோதனைகளிலும் எங்களது மாணவர் புள்ளிகள் எடுக்க முடியாத நிலையிலேயே இருப்பர். வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் பணத்தை அதிபர்கள் திட்டமிட்டு இதற்காகச் செலவிட்டுப் பள்ளிக்கூடங்களில் நூல்நிலையங்களை அமைக்கும் முயற்சிகளை முன்னெடுக்கலாம் அல்லது நூல் நிலையங்களை நவீனமயப்படுத்தலாம். அதுவே சிறந்தது. இங்கு இதன் பயன்பாடு முக்கியமானது என்பதை மறந்துவிடலாகாது.

எனவே தனித்து ஒரு முறை நில்லாது பரந்து பல்வேறு நிலைகளில் நின்றும் கல்விமேம்பாட்டை நோக்க வேண்டும். கற்றல் கற்பித்தலில் தொடக்கி அதற்குரிய ஆசிரியர் அணியை உருவாக்கல், பெற்றோர் ஈடுபாட்டை எவ்வாறு கொண்டுவரலாம். மாணவரை அறிந்து அவர்களுக்கு எது தேவை என்பதைக் கண்டு கற்பித்தல் என்று பல கோணத்தில் நின்றும் கல்விச் செயற்பாடுகளை நோக்க வேண்டும். இதற்கு பெரிய பாடசாலைகளே முன்னோடியாகச் செயற்பட வேண்டும். நான் ஆரம்பத்தல் கூறியது போல School Centered Egoism உள்ளதால் - பெரிய பள்ளிக்கூடங்களில் தொடங்க அது சிறிய பள்ளிக்கூடங்கள், வன்னிப்பள்ளிக்கூடங்கள் எங்கும் பரவும்.

இதில் மற்றொன்றை அவதானிக்க வேண்டும். கல்வியில் பிரதேசவாதம் இருக்கவே கூடாது. அந்தந்த கிராமத்தை அல்லது பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்தான் குறிப்பிட்ட பள்ளிக்கூடத்தின் அதிபராக வரவேண்டும் அல்லது ஆசிரியராக வரவேண்டும் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பாங்கு கூடாது. மற்ற ஊர் ஆசிரியர் வரக்கூடாது வந்தால் எப்படி வெளியேற்றலாம்? என்று நடவடிக்கை எடுப்பார். அதில் வீணாகக் காலத்தையும் பொருளையும் செலவிடுவர். எமக்குள் இந்த வகையிலும் நாம் எல்லாம் ஒரு இனம், ஒரு தேசிய இனம் என்ற அந்தப் பக்குவம் உருவாக்கப்படவில்லை. அந்தத் தவறான சிந்தனை மாற்றப்படல் வேண்டும்.

**பொருளியற்றுறை மூத்த பேராசிரியர் வி.நித்தியானந்தன் அவர்கள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் பொருளியல் துறைப் பேராசிரியர் பதவி வகித்துத் தற்போது ஓய்வுநிலையில் உள்ள பேராசிரியர் வி.நித்தியானந்தன் தெரிவித்தமை:

தொலைபேசி வாயிலாகத் தற்சமயம் இணைக்கப்பட்டு அதன் மூலம் எனது கருத்துக்களை முன்வைக்க விழையுமிடத்து, இந்த கருத்தரங்கில் இது வரை முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பற்றியோ அல்லது அலசப்பட்ட விடயங்கள் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. எனவே, நான் கூறப் புகும் சில விடயங்கள் ஏற்கனவே இதர பேச்சாளர் தொட்டவையாக அல்லது எடுத்துரைத்தவையாக இருக்கலாம். அவ்வாறு சிலவற்றை ஒரு மீள்நிலையில் நீங்கள் கேட்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டால் அதற்காக நான் உங்களிடம் முன்கூட்டியே மன்னிப்புக் கோருகின்றேன்.

இலங்கையின் வடக்குக் கிழக்கில், அதுவும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில், சமீப காலக் கல்விப் பொதுத் தராத உயர் நிலைப் பெறுபேறுகளின் அடிப்படையிற் பார்க்குமிடத்து, ஈழத் தமிழ் மாணவரின் பல்கலைக்கழக அனுமதியிற் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது, அவர்களது கல்வித் தரம் குறைவடைந்து விட்டிருப்பதற்கான ஓர் அறிகுறி என எடுத்துக் கொண்டு அதற்கான காரணங்களை அலசுவது தான் இந்தக் கருத்தரங்கின் நோக்கம். அதாவது, ஈழத்தமிழர் கல்வி என்பது ஒரு பாரிய பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. இத்தகைய கல்விப் பிரச்சினைக்கான காரணங்கள் யாவை என்பது நோக்கப்பட வேண்டும். இது விடயத்திலான எனது எண்ணங்கள் வருமாறு:

ஈழத் தமிழர் வாழ்விடமாகிய வடக்குக் கிழக்கிலான கல்விப் பிரச்சினை என்பதை எடுத்துக் கொண்டு, அதனை ஒரு தனிநிலையில் வைத்து நோக்க முற்படுவது ஒரு மிகக் குறுகியதொரு பார்வையாகவே அமைய முடியும். ஏனெனில் ஈழத் தமிழர் வாழ்வில், குறைந்தது கடந்த அரை நூற்றாண்டு காலப்பகுதியிலாவது, கல்வி மாத்திரம் தான் பிரச்சினைக்கு உரியதொன்றாகியுள்ளதென்று எவ்வகையிலும் கூறிவிட முடியாது. அவர்களது அரசியற், சூழல் எதிர்க்கணிய மாறுபாட்டுச் செய்முறையொன்றுக்கு இடம் கொடுத்து அதன் தாக்கம் அவர்தம் சமூகப் பொருளாதார வாழ்க்கையைச் சீர்குலைக்க முற்பட்டவிடத்து அதன் எதிரொலியானது எல்லாத்து துறைகளையுமே பீடித்திருந்தது. இவை யாவற்றிலும் ஏற்கனவே தலைகாட்டியிருந்த பிரச்சினைகள் மேலும் முனைப்படைவதற்கு இடம் கொடுக்கப்பட்டது. மாத்திரமன்றிப் புதிய நெருக்கடிகளும் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களில் தோன்றி ஓர் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு வழி வகுப்பதாயிருந்தது. ஆகவே, இந்த வீழ்ச்சிப் பொதியின் ஒரு பரிமாணமாகவே கல்விப் பிரச்சினை என்பதும் நோக்கப்பட வேண்டும். இந்தப் பரிமாணத்தின் ஒரு தனி எடுத்துக்காட்டு என்ற வகையிற் சுட்டுவதாயின் ஈழத் தமிழர் உயர்கல்வியைப் பெரிதும் பாதித்த 'தரப்படுத்தல்' என்பது குறிக்கப்படலாம்.

அது மாத்திரமன்றி, ஈழத் தமிழர் வாழ்க்கை நலன் என்பது ஒரு பரிபூரணப் பாதிப்புக்குட்பட்டு நெருக்கடியினை எதிர்கொண்டவிடத்து, அதன் ஓர் அங்கமாக விளங்கும் கல்வி மாத்திரம் வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு ஒரு செழிப்பு நிலையை வெளிப்படுத்துமென எவ்வகையிலும் எதிர்பார்க்க முடியாது. எனவே, இவ்வாறு பார்க்குமிடத்து, ஒட்டுமொத்த வாழ்க்கை நலன் மீதான பாதிப்பு என்பது கல்வித்துறை வீழ்ச்சிக்கான ஒரு தலையாய காரணமாக வெளிப்படுகின்றது. அதாவது, ஈழத்தமிழர் வாழ்க்கையின் ஏனைய துறைகள் பாதிப்புக்குட்பட்டவிடத்து, அத்தகைய பாதிப்பு, கல்வியையும் தன்வசப்படுத்துவது தவிர்க்க முடியாததொரு விளைவாயிற்று.

இதுவரை முன்வைக்கப்பட்ட ஒரு பொதுநிலையிலான கருத்துக்களுக்குப் புறம்பாக, ஓர் அகநிலையில், அதாவது கல்வித் துறையைச் சார்ந்து நின்றும், ஈழத்தமிழர் கல்விப் பிரச்சினையை அணுக முடியும். இதனைக் கூட இரு முனைகளில் மேற்கொள்வது சாத்தியமானது. அவற்றுள் முதலாவது (உயர்) கல்வி என்பதை ஒரு முழுநிலையில் எடுத்துக்கொண்டு, அதனை மேம்படுத்துவதற்கான வசதிகள் சமீப காலத்தில் எத்தகைய ஒரு முறையில் வளர்ச்சியடைந்துள்ளன என்பதையும் அவற்றின் நடப்பு நிலை யதார்த்தம் என்ன என்பதையும் ஆராய்வது. மற்றது, பல்கலைக்கழகக் கல்வி என்பதைத் தனியாக எடுத்துக் கொண்டு, அது சமகாலத்தில் முகம் கொடுக்க முற்பட்டிருக்கும் மாறுபாடுகள் பற்றிப் பார்ப்பது.

முதலில் அகநிலை வளர்ச்சிகளை எடுத்துக் கொள்வோமாயின், இரண்டாந்தரக் கல்வி மட்டத்திலான உயர் கல்வி வசதிகள், முக்கியமாக கல்விப் பொதுத் தராதர உயர் மட்ட வகுப்புக்கள், இட ரீதியாக விரிவு பெற்றிருப்பதும் அத்தகைய இடவழி விரிவு தொடர்ந்து நடைபெறுவதும் மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். புதிய பாடசாலைகள் பல நிறுவப்படுவதுடன், ஏற்கனவே செயற்பட்ட பாடசாலைகளிற் புதிதாக உயர்மட்ட வகுப்புக்கள் அறிமுகமாகும் செய்முறையும் கூடவே இடம் பெறுகின்றது. ஆனால், பௌதிக நிலையிலான இந்த விரிவாக்கம் அதற்கு ஒத்திசைவான தர உயர்வையும் எட்டியுள்ளதா எனக் கேட்பின், அதற்கு உறுதியாக 'ஆம்' எனப் பதிலிறுப்பது கடினமானது. தர உயர்வு பற்றிப் பார்க்குமிடத்துப் பல விடயங்களைக் கணிப்பிற் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஆசிரியர் தொடர்பில் அவர்களது நியமனம், இடமாற்றம், ஊதியம், வாழ்வு வசதிகள் என்பனவும், மாணவர் தொடர்பில் அவர்கள் சுமுகமாகக் கற்பதற்கான அடிப்படை வசதிகளாகிய உணவு, உடை, உறையுள் என்பவற்றுடன் குறைந்தபட்சம் பணவசதி போன்ற இன்னோரன்னவையும் கவனிக்கப்பட வேண்டும். இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றையும் தனித்தனி அலசி அவை கல்வி மேம்பாட்டிலும் அதன் அறுவடையாகிய பெறுபேறுகளின் வடிவிலான தர உயர்வு மீதும் எத்தகைய செல்வாக்கினைச் செலுத்துகின்றன, பாதிப்பினை ஏற்படுத்துகின்றன என்பன ஆராயப்பட வேண்டும்.

அடுத்து, பல்கலைக்கழகக் கல்வி என்பதைத் தனியாகப் பிரித்து நோக்கின், இலங்கையில் மாத்திரமன்றி, அது போன்ற வளர்முக நாடுகள் பலவற்றிலும் சுதேசிய மட்டத்திலான பல்கலைக்கழகங்களும் அவை வழங்கி வந்த உயர் கல்வியும் மரபு ரீதியாகப் பெற்றிருந்த செல்வாக்கும் முக்கியத்துவமும் கணிசமான பெறுமதிக் குறைவுக்கு உட்பட்டிருப்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதொரு வளர்ச்சியாகும். அதற்கான முக்கிய காரணம் யாதெனில், இன்று அவற்றின் பங்களிப்புக்குப் போட்டியாகப் பலதரப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பல்கலைக்கழகங்கள் இந்நாடுகளில் நிறுவியுள்ள கிளைகளும் மிகுந்த முனைப்புடன் செயற்பட முற்பட்டுள்ளன. உதாரணமாக அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகம் மலேசியாவிலும் நியூசிலாந்தின் மஸ்ஸி பல்கலைக்கழகம் இலங்கையிலும் நிறுவியுள்ள கிளை அமைப்புக்கள் குறிப்பிடலாம். இவை இந்நாடுகளிலெல்லாம் பௌதிக வடிவில் தம்மை நிலைநாட்டிக் கொள்வது மாத்திரமன்றி, உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் அதுவரை வழங்கப்படாத பல புதிய பாடநெறிகளையும் அறிமுகப்படுத்த விழைகின்றன. இந்தப் பாடநெறிகள் புதியவை என்பதுடன் நிலவியிருக்கும் தொழிற் சந்தையிலான வேலை வாய்ப்புக்களுக்கு ஒத்திசைவான முறையில் திட்டமிடப்படுவதால், இவற்றில் தேர்ச்சி பெறும் பட்டதாரிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் தேடுவதைப் பெரிதும் சுலபப்படுத்துகின்றது. அதனால் இத்தகைய பாடநெறிகளுக்கான செலவு உள்நாட்டு உயர் கல்வியை விட மிக அதிகமாயிருந்தாலும், சுலபமான வேலைவாய்ப்பு, அதனுடன் சேர்ந்ததாகவோ அல்லது விடுபட்டதாகவோ கிடைக்கக் கூடிய வெளிநாட்டுப் பயணம் என்பதை கருதி உயர் கல்விகான தகைமை பெற்ற ஏராளமான மாணவர் இத்தகைய (வெளிநாட்டுப்) பல்கலைக்கழகங்களை நாடுகின்றனர். மறுபுறம், பல்கலைக்கழகங்களுக்குப் புறம்பாகச் செயற்படும் தனியார் கல்வி நிறுவனங்கள் பலவும் 'வேலைவாய்ப்பு' என்பதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு பாடநெறிகளை வடிவமைப்பதுடன், அவற்றிற்கான கல்விக் காலமும் பல்கலைக்கழகக் கல்வியை விடக் குறுகியதாகவும் விளங்கியிருக்குமிடத்துத் தொழில் தேடுவோர் மத்தியில் அவை, (பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுமிடத்து), கூடியளவான பிரபல்யம் பெற்று விளங்குகின்றன.

பல்கலைக்கழகக் கல்வி பொறுத்துச் சமீப காலமாக நிகழ்ந்து வரும் மேற்கூறியவாறான மாறுபாடுகளை ஈழத் தமிழ் மாணவருடன் தொடர்பு படுத்துவோமாயின், அவை மேலும் மெருகு பெறுவது தவிர்க்க முடியாத ஒரு வளர்ச்சியாகின்றது. பொதுவாக, அவர்கள் 1950களின் நடுப்பகுதியளவிலிருந்து முகம் கொடுக்க நேரிட்ட அரசியற் சூழல் படிப்படியாக நெருக்கடி மிகுந்ததொன்றாக மாறியமையும், குறிப்பாக 1970கள் முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது உயர் கல்வி வாய்ப்புக்கள் நேரடியாகவே அதற்குப் பலியாக்கப்பட்டமையும் நாம் யாபேரும் அறிந்ததே. அதன் மூலம் மாணவரது உயர் கல்வி வாய்ப்புக்கள் மாத்திரமன்றி அவர்களது தொழில் வாய்ப்புக்களும் பெரிதும் குறுகித் தமிழ் இளைஞர் எதிர்காலமும் கேள்விக் குறியொன்றாகியிருந்தது. இந்த இருண்ட எதிர்காலத்துடன் 1983 இனக் கலவரங்களும் சேர்ந்து கொண்ட போது, அது ஈழத் தமிழரின் உலகளாவிய பாரிய புலப் பெயர்வொன்றுக்கு இடமளித்து, அதுவே இன்று அரசியற் பொருளாதார ரீதியாகப் பலம் வாய்ந்த புலம்பெயர் சமூகமொன்றை உருவாக்கியுள்ளது. நாம் மேலே குறிப்பிட்ட உயர் கல்வி வாய்ப்புக்களிலான நவீன மாற்றங்கள் ஈழத் தமிழ் மாணவர் மத்தியில் வேரூன்றுவதை அவர்களது வளம் மிக்க புலம்பெயர் சமூகம் சாத்தியப்படுத்தியுள்ள தெனின் அது மிகையாகாது.

ஈழத் தமிழ் மாணவரின் சவாலுக்குள்ளாகிய உயர் கல்வியும் அது சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கான பற்றாக்குறையும் இன்று எந்த வயிலும் மாற்றமடைந்து விட்டதென்று கூறமுடியாது. ஆனால், நீண்ட காலமாகவே இத்தகைய சவாலும் அதற்கேற்றவாறு மாணவரும் அவர்தம் பெற்றோரும் தம்மைச் சரி செய்து கொள்வதும் நடைபெற்றுக் கொண்டிருக்குமிடத்துச் சமூகம் தன்னை அதற்குப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டதெனலாம். ஆனால் இவ்வாறான யதார்த்த நிலைமை மாற்றமடைந்து விட்டதென்பதை எந்த வகையிலும் குறித்து நிற்காது. ஆகலே இவ்வாறானதொரு சூழலில், தாம் நன்மை பெறுவதற்கான மாற்று வாய்ப்புக்கள், ஏதேனும் கிடைக்கப்பெறுமாயின் அவற்றை உரியவாறு பயன்படுத்திக் கொள்ள அவர்கள் தவறுவதில்லை. அத்தகையதொரு வாய்ப்புத் தான் நாம் மேலே முன்வைத்த உயர் கல்வியிலான பிந்திய கட்ட மாறுபாடுகள் மூலம் அவர்களுக்குக் கிட்டியுள்ளது. அவற்றை அவர்கள் தகுந்தவாறு பயன்படுத்த முன்வரும் போது ஈழத் தமிழர் புலம்பெயர் சமூகம் அவர்களுக்கு இரு வழிகளில் உறுதுணையாக விளங்க முடிகின்றது. ஒன்று, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களினதும் தனியார் கல்வி நிறுவனங்களினதும் ஒப்பீட்டளவில் உயர்வான கட்டணங்களை முற்றாகவோ அல்லது அவற்றின் ஒரு பகுதியையோ ஒரு குடும்பத்தின் புலம்பெயர் சமூக உறவுகள் பொறுப்பேற்க முன்வரலாம். இவ்வாறான நிதியீட்டம் தமிழ் மாணவர் தமது உயர் கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதைப் பெரிதும் சாத்தியப்படுத்துகின்றது. இத்தகைய ஒரு செல்நெறி எந்தளவுக்குப் பலம் பெற்றுள்ளதோ அந்தளவுக்கு உள்நாட்டு உயர் கல்வி வாய்ப்புக்களை மாணவர் நாடுவதும் தவிர்க்க முடியாத ஒரு வகையிற் குறைவடையும். மற்றது, நிதியீட்டம் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் எவ்வாறிருப்பினும், (உயர்) கல்விக்குப் பிந்திய தொழில் வாய்ப்புக்கள் விடயத்திற் கை கொடுக்கக் கூடியதொரு நிலையில் புலம்பெயர் சமூகம் உள்ளதென்பதும் மறுக்க முடியாததோர் உண்மையாகும். இவ்வாறு புலம்பெயர் மட்டத்திலிருந்து தொழில் வாய்ப்புக்கள் பெறப்படும் போது அது உயர் கல்வி பெற்றவருக்கு நேரடியாக நன்மை பயக்கும் அதே நேரத்தில், ஓர் உள்ளார்ந்த நிலையில், புலம்பெயர் சமூகத்தை மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விரிவுபடுத்துவதற்கும் பங்களிப்புச் செய்கின்றது. ஏனெனில் இவ்வாறு தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பலரும் திரும்பவும் தம் தாயகம் நோக்கி வருவதைத் தவிர்த்து வெளிநாடுகளில் நிரந்தரமாகத் தங்கிவிடவே செய்கின்றனர். புலம்பெயர் சமூகத்தின் இத்தகைய விரிவாக்கம் இன்னொரு தலைமுறை ஈழத் தமிழ் மாணவருக்கான உயர் கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்துமென்பதிலும் சந்தேகமில்லை.

இவ்வாறான இன்னோரன்ன காரணிகள் இலங்கையில் உயர் கல்விக்கான ஈழத் தமிழ் மாணவர் கேள்வியைக் குறைத்து அவர்கள் சுதேசியப் பல்கலைக்கழகங்களை நாடுவதையும் குறைக்க முற்படும். இதுவே கல்விப் பொதுத் தராதர உயர் நிலைப் பெறுபேறுகளிலும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட அநுமதியிலும் பிரதிபலிக்க முற்படுகின்றதெனலாம்.

**தற்போது க.பொ.த (உ.த) கல்விபயிலும் மாணவரின் நோக்கில்**

ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வு மட்டுப்படாக உள்ளது. ஆசிரியர்களிடம் அர்ப்பணிப்பு மனப்பாங்கு அருகிக் காணப்படுவதால் விசேட கவனிப்புத் தேவைப்படும் மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். அண்மைய அசம்பாவிதங்களாலும் சமூகவியல் பாதிப்புக்களாலும் உளவியல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளான மாணவரிடம் காணப்படும் வேறுபாடுகளை நீக்கி அனைவரையும் சமநிலைப்படுத்த வேண்டும். அத்துடன் விசேட உதவி தேவைப்படும் மாணவர்களை இனங்கண்டு. வேண்டும் உதவிகளைச் செய்தல் வேண்டும்.

## கொஞ்சம் சிரியுங்கள்



*சுகன்ஜாவும் ரமேசும் கணவன் மனைவி. சுகன்ஜா ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிகின்றாள். ரமேஸ் வீட்டில் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டு இருக்கின்றார். இவர்களுக்கு தினேஸ் என்று ஒரு மகனும் உண்டு ஒரு நாள் சுகன்ஜா அலுவலகத்தில் இருந்து ரமேசுக்கு போன் எடுத்தாள்*

| | | |
|---|---|---|
| **சுகன்ஜா** | **:** | **எங்கே நிக்கின்றீர்கள்?** |
| **ரமேஸ்** | **:** | **வீட்டில் தான்** |
| **சுகன்ஜா** | **:** | **எப்படி நம்புவது? வீட்டில் இருக்கும் மிக்சியை ஒன் பண்ணி காட்டுங்கள்** |
| **ரமேஸ்** | **:** | **சரி** |

*ரமேஸ் மிக்சியை ஒன் பண்ணி சத்தத்தை தொலைபேசிக்கூடாக சுகன்ஜாக்கு கேட்க வைத்தான். மிக்சி சத்தத்தை கேட்ட சுகன்ஜா ரமேஸ் வீட்டில் தான் நிற்பதாக நம்பினாள் இவ்வாறு மூன்று நான்கு நாட்கள் தொடர்ச்சியாக நடை பெற்றது.*

*இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் மனைவி அலுவலகத்திற்கு லீவு போட்டு விட்டு வீட்டுக்கு வந்து விட்டாள். வீட்டுக்கு வந்தவள் விளையாடிக் கொண்டு இருந்த தனது மகன் தினேசிடம் கேட்டாள் அப்பா எங்கேயடா என்று.*

**அதற்கு தினேஸ் சொன்னான் "அப்ப இப்பதானம்மா மிக்சியை தூக்கி கொண்டு வெளியே போறார்"**

*சுகன்ஜா அதிர்ந்தாள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகத்தில் இதுவரை தோல்வியை கண்டிராத
ஒரு கூட்டம் என்று கூறினால்
நீங்கள் ஆப்கானிய மக்களைக் கூறலாம்.
இதுவரை படை எடுத்து வந்த அனைத்து வல்லரசுகளையும்
புறமுதுகு காட்ட வைத்த
ஒரே நாடு ஆப்கானிஸ்தான்."



# ஆப்கானிஸ்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆப்கானிஸ்தான்** வரலாற்றுக்கு முந்திய காலம் தொடக்கமே முக்கியமான பிரதேசமாக உள்ளது. இற்றைக்கு 50,000 ஆண்டுகளுக்கு முன்னரே ஆப்கானிஸ்தானில் பல நாகரீகங்கள் இருந்தமைக்கான தடயங்கள் கிடைத்துள்ளன. இது ஐரோப்பா ஆசியாவின் சந்திப்புப் புள்ளியாக இருந்ததுடன் பல யுத்த களங்களையும் கண்டுள்ளது. இன்று ஆப்கானிஸ்தான் என்று அறியப்படும் இப்பிரதேசம் ஆதிகாலம் முதலே பல ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளானது. ஆரியர், (இந்தோ-ஈரானியர்கள், இந்தோ-ஆரியர்கள், மேதாக்கள், பாரசீகர் போன்றோர்), கிரேக்கர், மௌரியர்கள், குஷான்கள், ஹெப்தலைட்கள், அரேபியர், மொங்கோலியர், துருக்கி, பிரித்தானியா, சோவியத் ஒன்றியம் மற்றும் மிக அண்மைக் காலத்தில் ஐக்கிய அமெரிக்கா வரை பல ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளானது.

கிமு 2000 ஆம் ஆண்டளவில் மத்திய ஆசியாவைச் சேர்ந்த பல குழுக்கள் ஆப்கானிஸ்தானினுள் குடிபெயர்ந்துள்ளனர். இவ்வாறு வந்து குடியேறியவர்களில் பெரும்பாலானவர்கள் ஆரியர்களாவர். இவர்கள் இந்து ஐரோப்பிய மொழியைப் பேசியமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலப் பகுதியில் ஆரியர்கள் பாரசீகம் மற்றும் இந்தியாவிற்குள்ளும் குடி பெயர்ந்தனர். இவர்கள் குடியேறிய பிரதேசங்கள் ஆரியானா அல்லது ஆரியர்களின் பூமி என அழைக்கப்பட்டது.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தப் பிரதேசத்தில் பாரசீகப் பேரரசான அச்செமினிட் (Achaemenid) சாம்ராஜ்ஜம் எனும் சாம்ராஜ்ஜம் பலமாக இருந்தது. கிமு 300ஆம் ஆண்டளவில் மாவீரன் அலெக்சாந்தர் இந்தப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டான். கிமு 323 ஆம் ஆண்டில் இவரின் மரணத்திற்குப் பின்னர் செலூசிட்ஸ், பாக்ட்ரியா, அத்துடன் இந்தியாவின் மௌரியப் பேரரசு போன்ற பல பேரரசுகள் இந்தப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தன. மௌரியப் பேரரசினால் இப்பிராந்தியத்தினுள் பௌத்த மதம் பரப்பப்பட்டது. 1299 ஆம் ஆண்டில் இப்பிராந்தியம் செங்கிஸ்கான் என்பவனின் கொடுங்கோல் ஆட்சிக்குட்பட்டது. இவன் மொங்கோலிய இனத்தைச் சேர்ந்தவன் ஆவான். 1504 ஆம் ஆண்டில் பார்பர் என்ற ஆட்சியாளனினால் காபூலை மையமாகக் கொண்டு முகலாயப் பேரரசு ஸ்தாபிக்கப்பட்டது. 17 ஆம் நூற்றாண்டு அளவில் பாரசீகத்தின் சஃபாவிட்ஸ் (Safavids) ஆப்கானிஸ்தானின் ஆட்சியை தமது கட்டுப்பாட்டி னுள் கொண்டு வந்தனர்.

20நூற்றாண்டில் ரஸ்யா அமெரிக்காவிற்கிடையிலான பனிப் போரில் ஆப்கானிஸ்தானும் அகப்பட்டுக் கொண்டது. 1979 ஆம் ஆண்டில் ஜிம்மி காட்டர் தலைமையிலான அமெரிக்க அரசு அவரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் Zbigniew Brzezinski உம் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ மூலம் இடதுசாரி எதிர்ப்பாளர்களான முஜாகுதீன்களுக்கு உதவிஅளித்தது. ஆயினும் உள்ளூாரில் சமவுடமையைக் காப்பாற்ற சோவியத் ரஸ்யா ஆப்கானிஸ் தானுடன் நட்புறவு உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதன் படி சுமார் 110,000 முதல் 150,000 வரையான சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானுள் நுழைந்தன. இவர்களுக்கு சுமார் 100,000 வரையான இடதுசாரி ஆப்கானிய படைகள் ஆதரவு வழங்கின. சோவியத் படைகளின் வருகையை அடுத்து சுமார் 5 மில்லியன் ஆப்கானிய அகதிகள் பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளில் தஞ்சம் அடைந்தனர். 3 மில்லியனுக்கு அதிகமானோர் பாகிஸ்தானிலும், ஒரு மில்லியன் அளவில் ஈரானிலும் பல்வேறு நாடுகளிலும் நிரந்தரமாகத் தங்கியதும் இங்கே குறிப்பிடத்தக்கது. பல்வேறு சர்வதேச அழுத்தங்களினாலும் சுமார் 15,000 துருப்புக்களை முஜாகுதீன்க ளுடனான யுத்தத்தில் இழந்ததனாலும் சோவியத் துருப்புகள் 10 ஆண்டுகளின் பின்னர் 1989 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறின.

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைகள் வெளியேற்றப்பட்டது அமெரிக்கர்களால் பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது. சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்றப் பட்டதும் அமெரிக்காவிற்கு ஆப்கானிஸ்தான் மீதான நாட்டம் குறைந்தது. அமெரிக்கா போரினால் சிதிலமான ஆப்கானிஸ்தானைச் சீரமைக்க உதவவில்லை. சோவியத் ரஸ்யா தொடர்ந்து அதிபர் நஜிபுல்லாவிற்கு தமது ஆதரவை வழங்கியது, ஆயினும் 1992 ஆம் ஆண்டில் இவர் வீழ்த்தப்பட்டார். சோவியத் படைகளின் பிரசன்னம் இன்மை இந்த இடதுசாரி அரசின் வீழ்ச்சிக்கும் போராளிகள் ஆட்சியைக் கைப்பற்றவும் உறுதுணையாக இருந்தன.

பல சிறுபான்மையினரும், புத்திஜீவிகளும் யுத்தத்தின் பின்னர் ஆப்கானிஸ்தானை விட்டுவெளியேறினர். சோவியத் வெளியேற்றத்தின் பின்னரும் முஜாகுதீன்களின் பல உட்பிரிவுகளிற்கிடையில் யுத்தங்கள் இடம்பெறலாயின. இதன் உச்சக்கட்டமாக 1994 ஆம் ஆண்டில் 10,000 பொதுமக்கள் காபூலில் கொல்லப்பட்டனர். இக்காலகட்டத்தில் தலீ பான் அமைப்பு எழுச்சி பெற்றது. இவர்கள் பெரும்பாலும் ஹெல்மான்ட், கந்தகார்

**"என் தாயே நான் சிங்கம் போன்ற மனஉறுதி படைத்த ஒரு கூட்டத்தை கண்டேன் அந்த வீரர்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் இரும்பினால் கட்டிய சுவரை போன்ற உறுதியை கண்டேன் நீங்கள் இந்த உலகத்திற்கு ஒரே ஒரு அலக்ஸாண் டரை கொண்டு வந்துள்ளோம் என்று நினைத்துக்கொண்டிருக் கிறீர்கள். ஆனால் ஆப்கானிஸ்தான் என்ற மண்ணில் உள்ள ஒவ்வொரு தாயும் இந்த பூமிக்கு பல அலக்ஸாண்டர்களை கொண்டு வந்த வண்ணம்தான் இருக்கிறார்கள்".**

**அலக்ஸாண்டர் என்ற வீரன் தன் தாய்க்கு எழுதிய கடிதத்தில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தைச் சோந்த பஷ்துனர்கள் ஆவார்.

செப்டம்பர் 11, 2001 தாக்குதலிற்குப் பின்னர் அமெரிக்கா ஆப்கானில் உள்ள அல்குவைதா? வலையமைப்பைத் தகர்க்க இராணுவ நடவடிக்கையை ஆப்கானித்தான் மீது நடத்தியது. தாலிபானைத் தோற்கடிக்க வடக்கு முன்னணியுடன் அமெரிக்கா நட்புறவு பாராட்டியதும் குறிப்பிடத்தக்கது.

2001 டிசம்பரில் ஆப்கானின் பெரும்பாலான தலைவர்கள் ஜேர்மனியின் "பொன்" நகரில் கூடி ஆராய்ந்து, ஓர் இடைக்கால அரசை அமைக்க இணங்கினர். இதன் போது கந்தகார் நகரைச் சோந்தவரும், பட்டாணிய(பாஸ்துன்) இனத்தவருமான "ஹமீது கர்சாய்" ஆப்கானிய இடைக்கால அரசின் இயக்குநராகத் தெரிவு செய்யப்பட்டார். 2004 இல் நடைபெற்ற தேசிய அளவிலான தேர்தலின் மூலம் ஹமீது கர்சாய் புதிய அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டார். செப்டம்பர் 2005 இல், சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற்றன. 1973ஆம் ஆண்டுக்குப்பின்னர்ச் சுதந்திரமாகத் தெரிவுசெய்யப்பட்ட "சட்டவாக்க சபை" இதுவாகும். இதில் பெண்கள் வாக்களித்தமை, பெண்கள் தேர்தலில் போட்டியிட்டமை, தெரிவுசெய்யப்பட்டமை என்பன குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

ஆப்கானிய மக்களை பற்றி அமெரிக்க அறிஞர் மற்றும் வானொலி தொகுப்பாளர் Mike Malloy அட்லாண்டாவில் கூறியது,


"எந்த ஒரு அரசன் தனது உயிரை மாய்க்க விரும்புகிறானோ அவன் ஆப்கானிஸ்தான் மீது படை எடுக்கட்டும்"

வரலாறுகளை படைத்த மாவீரனை அலக்ஸாண்டரை கூட வியக்க வைத்தவர்கள் தான் இந்த ஆப்கானிய சிங்கங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தினமும் குடித்துவிட்டு வீட்டுக்கு வரும்
தனது மகளின் கணவனைப் பார்த்து
எரிச்சலடைந் தாய் ஒரு நாள் மகளிடம்

என்னடி புள்ளை உன் புருஷன் தினமும் குடித்துக்
கொண்டே திரிகின்றானே நல்லவா இருக்கு


அதற்கு மகள் சொன்னாள்

தெரியல அம்மா நான் இன்னும் குடித்துப் பார்க்கவில்லை என்றாள்

Teacher: 2 ல 2 போன மிச்சம் எவ்ளோ?

Student: சரியா புரியல டீச்சர் மறுபடியும் சொல்லுங்க!

Teacher: டே உன் கிட்ட 2 இட்லி
இருக்குனு வச்சிக்கோ.
நீ 2 இட்லி சாப்பிட்டால்
மிச்சம் என்ன இருக்கும்?



Student: சட்னி.

Teacher: ???





ஏன் ஸ்கூட்டரை திருடினே?”

“டிராபிக் போலிஸ்காரர்தாங்க
சீக்கிரம் வண்டிய எடு வண்டிய எடுன்னு
அவசரப்படுத்தினாரு எசமான்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயங்கரம்

## பான்கார்ஹ் கோட்டை

**ராஜஸ்தானில்** மலை சூழ்ந்த பகுதியில் பான்கார்ஹ் என்ற இடத்தில் இருக்கிறது இந்தப் பாழடைந்த கோட்டை ஜெர்ப்பூர் மற்றும் ஆல்வார் இடையில் சரிஸ்கா புலிகளின் சரணாலயத்தை ஒட்டி உள்ளது. இந்தக் கோட்டையின் அமைப்பு, அது அமைந்திருக்கும் இடம் ஆகியவை சுற்றுலா பயணிகளை எளிதில் ஈர்த்துள்ளது.

இந்த கோட்டை உலகின் பயங்கரமான இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதன் காரணமாகவே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக இங்கு படையெடுக்கின்றனர். இந்த பயங்கரக் கோட்டையை ***1613***ம் ஆண்டு மன்னன் மடோ சிங் கட்டினார்.

இதைப் பேய்களின் கோட்டை என்றும் அழைப்பர். இதன் கட்டமைப்பு காரணமாக இதில் பலரின் ஆவிகளும் வலம் வருவதாகக் கூறப்படுகிறது. மேலும்; இரவு நேரங்களில் உள்ளே சென்றால் உயிருடன் யாரும் திரும்ப மாட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தக் கோட்டையில் பேய்கள் நடமாட்டம் இருப்பதாக வெளியிடப்பட்ட வீடியோக்களும் இணையத்தில் பரவியுள்ளது. இதற்கு பல்வேறு கட்டுக்கதைகள் இருக்கின்றன. ஆனால் இவை எந்த அளவு உண்மை என்பது தெரியவில்லை.இந்தக் கோட்டையின் இளவரசி ரத்னாவதியை அந்தப் பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த ஒரு மந்திரவாதி அபகரிக்க நினைத்தான். ஆனால் அவனுடைய பல திட்டங்களும் எடுபடவில்லை.

இந்நிலையில் இளவரசியின் வேலைக்காரியை வேறு வேடத்தில் வெளியில் சந்தித்த அந்த மந்திரவாதி, தான் மாந்திரீகம் செய்து வைத்திருந்த எண்ணெயை அவளிடம் ஒரு வழியாக விற்றுவிட்டான். அந்த எண்ணெயை இளவரசி தொட்டுவிட்டால் நேராக வந்து அவளே மந்திரவாதியிடம் சரணடைவான் என்று நினைத்திருந்தான்.

ஆனால் மந்திரவாதியின் திட்டம் இளவரசிக்கு தெரியவர, அந்த எண்ணெயை அவள் கீழே கொட்டிவிட்டார். அந்த மாந்திரீக எண்ணெய் அந்த மந்திரவாதியையே பழிவாங்கிவிட்டது.

இதனால் அந்த மந்திரவாதி அந்தக் கோட்டையைச் சபித்துவிட்டு இறந்துவிட்டான். இதனால் அங்கு உள்ளவர்கள் இறந்துவிட்டதாகவும், அவர்கள் அங்கு ஆவியாக அலைவதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாகப் பல்வேறு ஆராய்ச்சிகளையும் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி அமைப்பு நடத்தியது. அவர்களது அறிவிப்புப் பலகைகளையும் அங்கு காணமுடியும். அதில் மறைமுகமாகப் பல்வேறு வாசகங்கள் இடம்பெற்றிருக்கும்.

சூரிய வெளிச்சத்திற்கு முன்பும், சூரிய வெளிச்சத்திற்கு பின்பும் அங்கு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்ற குறிப்புகள் அதில் அடங்கி இருக்கும்.

இதை மீறிச் செல்பவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவர். இதில் அடங்கி இருக்கும் மர்மங்கள் காரணமாகவே இது போன்ற எச்சரிக்கைகளை சுற்றுலா பயணிகளுக்கு தொல்பொருள் ஆராய்ச்சி அமைப்பு கொடுக்கிறது.

ஆசியக் கண்டத்தில் மிகவும் அழகாக, ஆபத்தான இடங்களில் இது ஒன்றாக இருப்பதால் எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் இங்கு படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகளும் அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்வழிச் சமூகமும் மொசுவா இனமும்

**தொன்மையான** காலத்தில் பெண்களால் தலைமை தாங்கப்பட்ட தாய்வழிச் சமுதாயம் இருந்ததாகக் கேள்விப் பட்டிருப்போம். தக்கணத்தில் சாதவாகனர் காலத்தில் தாயின் பெயரையே முதற் பெயராக பாவித்ததாகவும் கூறப்படுகின்றது. ஆனால், அந்தச் சமுதாயம் எப்படி இருக்கும் என்பதை சீனாவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் நேரில் காணலாம். தென் மேற்கு சீனாவில் உள்ள யுன்னான் மாகாணம் பெருமளவு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகும்.

சுவிட்சர்லாந்து போன்ற அழகான இடங்களைக் கொண்ட லிஜியான் நகரத்திற்கு முதலில் செல்ல வேண்டும். அங்கிருந்து சில நூறு கிலோ மீட்டர் தூரத்தில் மொசுவோ மக்கள் வாழும் பிரதேசம் உள்ளது. சீனாவின் அங்கீகரிக்கப்பட்ட தேசிய இனங்களில் அதுவும் ஒன்று.

சுமார் நாற்பதாயிரம் மக்கட்தொகை கொண்ட மொசுவா இனத்தவர்கள், திபெத்தோ-பர்மிய இனக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். திபெத்திய, பர்மிய மொழிகளுக்கு இடைப்பட்ட தனித்துவமான மொழியைப் பேசுகின்றனர். இன்றைய நவீன காலத்திலும் பாலின சமத்துவம் நிலவுவது அந்த இனத்தின் சிறப்பம்சம் ஆகும். அந்தச் சமுதாயத்தில் பெண்கள் தான் தலைமை வகிக்கின்றனர். வயலில் இறங்கி கடின வேலைகளைச் செய்வதும் பெண்கள் தான்! ஆண்கள் எந்த வேலையும் செய்யாமல் ஊர் சுற்றிப் பொழுது போக்குவார்கள்.

மொசுவோ மக்கள் இன்றைக்கும் கூட்டுக் குடும்பமாக ஒரே வீட்டிற்குள் வாழ்கின்றனர். வயது வந்த பெண்களுக்கு மட்டும் தனியான அறை ஒதுக்கப்பட்டிருக்கும். ஒரு பருவம டைந்த பெண், தனக்கான ஆண் துணையைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்கிறார். அவர் விரும்பும் ஆண், அன்றைய இரவு அவருடன் தங்கலாம். விடிந்தவுடன் அந்த உறவு முடிந்து விடுகின்றது. மொசுவா மக்கள் இதனை “நடக்கும் திருமணங்கள்” என்று அழைக்கின்றனர்.

அந்த மக்களின் வாழ்க்கை முறையை வெளியில் உள்ளோர் தவறாகப் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொள்கிறார்கள். மொசுவா பெண்களின் பாலியல் சுதந்திரம் என்பது, தினசரி ஓர் ஆடவனு டன் படுக்கையைப் பகிர்ந்து கொள்வதல்ல. ஓர் உறவானது, ஒரு நாள் மட்டுமல்லாது வருடக் கணக்காகவும் நீடிக்கலாம். அது அந்தப் பெண்ணின் தனிப்பட்ட சுதந்திரம். எந்தக் கட்டுப்பாடும் இன்றி, தனது வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கவும், மாற்றிக் கொள்ளவும் அந்தப் பெண்ணுக்கு உரிமை உண்டு.

ஒரு குழந்தை பிறந்தவுடன், அந்தப் பெண்ணுடன் உறவு கொண்ட எந்த ஆணும், தானே தந்தை என்று சொந்தம் கொண்டாடுவதில்லை. அந்தக் குழந்தையைப் பெற்று வளர்ப்பது, முழுக்க முழுக்க பெண் வீட்டார் பொறுப்பு. இவர் தான் தந்தை என்று யாராவது இனங் காணப்பட்டாலும், குழந்தைக்குப் பரிசுப் பொருட்களைப் கொடுப்பதுடன் அவரது கடமை முடிந்து விடுகிறது. தொடர்ந்து, தாயான பெண்ணின் சகோதரர்கள் தான் தந்தை ஸ்தானத்தில் இருந்து அந்தக் குழந்தையை வளர்ப்பார்கள். மொசுவா மொழியில் "அப்பா என்ற ஒரு சொல்" கூடக் கிடையாது!

வேலைக்குப் போவதும், குழந்தை பெற்று வளர்ப்பதும் பெண்களாக இருந்தாலும், அது ஒரு பெண்ணாதிக்க சமுதாயமாக இருக்கவில்லை. மாறாக எல்லாக் கட்டத்திலும் பால் சமத்துவம் பேணப் படுகின்றது. சிலநேரம், ஒரு குடும்பத்தில் பெண்களின் எண்ணிக்கை கூடி விட்டால், ஆண்கள் அதிகமாக உள்ள இன்னொரு குடும்பத்துடன் குடும்ப உறுப்பினர் களைப் பரிமாறிக் கொள்வார்கள்.

மொசுவா சமுதாயத்தில் பாலியல் சுதந்திரம் சர்வ சாதாரணமான விடயம் என்பதால், அங்கு யாரும் புறம் பேசுவதில்லை. ஒருவரது "கள்ள உறவு" பற்றிய கிசு கிசு கதைகளை யாரும் பேசுவதில்லை. அது மட்டுமல்ல, யாரும் யார் மீதும் பொறாமை கொள்வதில்லை.

அந்தச் சமுதாயமானது, புராதன கால பொதுவுடைமைச் சமூக- பொருளாதார உற்பத்திகளை இன்று வரைக்கும் தொடர்ந்தும் பேணி வருகின்றது. "இது எனது உடைமை... எனது சொத்து..." என்று யாரும் உரிமை கொண்டாடுவதில்லை. அதனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டை, சச்சரவு, திருட்டு, பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளை போன்ற எந்த விதமான சமூகவிரோத செயல்களும் அங்கு இல்லை.

சீனா முழுவதும் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தை கைப்பற்றியதும், மொசுவா மக்களை தனியான தேசியஇனமாக அங்கீகரித்தனர். கலாச்சாரப் புரட்சிக் காலகட்டத்தில் மாத்திரம், நடக்கும் திருமண முறையை கைவிட்டு விட்டு, ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டனர். உண்மையில் அன்றிலிருந்து பலர் நீடித்த திருமண உறவுகளைப் பின்பற்றத் தொடங்கினார்கள். கலாச்சாரப் புரட்சி முடிந்த பின்னர், மரபு வழித் திருமணங்கள் மீண்டும் அதிகரித்தன.

தொண்ணூறுகளுக்குப் பிறகு ஒட்டு மொத்த சீனாவின் பொருளாதாரம் மாற்றமடைந்தது. சீன ஆட்சியாளர்கள் முதலாளித்துவத்தை ஊக்குவித்தார்கள். அது மொசுவா மக்களின் வாழ்க்கையிலும் தாக்கத்தை உண்டாக்கியது. பொதுவாக, அழகான மலைப் பிரதேசங்களைக் கொண்ட யுன்னான் மாகாணத்திற்கு, சீன உல்லாசப் பிரயாணிகள் படையெடுத்தார்கள். சுற்றுலாத்துறை நிறுவனங்கள், மொசுவா பிரதேசத்தையும் விட்டு வைக்கவில்லை.

"மகளிர் தேசம்" என்ற விளம்பரத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகள் கவர்ந்திழுக்கப் பட்டனர். பாரம்பரியமாக தந்தை வழி சமுதாயத்தில் வந்த சீனர்களுக்கு, "பெண்களின் தேசம்" பற்றிய தகவல்கள் புதுமையாகத் தோன்றின. பலர் அங்கே சுதந்திரமான பாலியல் தொழில் நடப்பதாக தவறாகப் புரிந்து கொண்டனர். சுற்றுலா நிறுவனங்களும், "நடக்கும் திருமணத்தில் ஒரு நாள் மணமகனாவது எப்படி?" என்று விளம்பரம் செய்து சீன ஆண்க ளைக் கவர்ந்தார்கள்.

அனேகமாக, மொசுவோ பற்றிய கற்பனையான கிளுகிளுப்பூட்டும் கதைகளை மட்டுமே கேள்விப்பட்டு வரும் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்து திரும்பிச் செல்வார்கள் என்பதில் ஐயமில்லை. சுற்றுலா நிறுவனங்கள் அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்துள்ளன. மொசுவா பிரதேசத்தில் ஒரு சிவப்பு விளக்குப் பகுதியை உருவாக்கி அங்கு சில மொசுவா பெண்களை பாலியல் தொழிலாளர்களாக அமர்த்தினார்கள்.

தமது சமுதாயத்தைப் பற்றிய தவறான கதைகள் பரப்பப் படுவதையிட்டு, மொசுவா மக்கள் பலர் எரிச்சலுற்றுள்ளனர். இருப்பினும், ஒரு சிலர் சுற்றுலாத் துறை கொண்டு வரும் வருமானத்தை இழக்கவும் விரும்பவில்லை. பாரம்பரியமாக பெண்கள் தலைமை தாங்கிய, அனைத்து முடிவுகளையும் எடுத்து வந்த மொசுவோ சமுதாயத்தில் எதிர்பாராத மாற்றம் உண்டானது. புதிதாகத் தோன்றிய முதலாளித்துவ பொருளாதாரம் காரணமாக, மொசுவா ஆண்கள் நன்மை அடைந்தனர்.

சுற்றுலா ஸ்தலங்களில், சேவைத் துறையில் உள்ள பல வேலைகளை பெண்களே செய்தாலும், ஆண்கள் தொடர்பாளர்களாகவும், முகவர்களாகவும் பணம் சம்பாதிக்கத் தொடங்கினார்கள். இருப்பினும் இத்தகைய பொருளாதார மாற்றமானது, அந்தப் பிரதேசத்தின் பின்தங்கிய வறுமையான கிராமங்களை மட்டுமே பாதித்து வருகின்றது. பெரும்பான்மையான மொசுவா பெண்கள், இப்போதும் வயலில் வேலை செய்து கொண்டே, பாரம்பரிய தாய் வழிக் குடும்ப உறவுகளை கட்டிக் காத்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் கண்ட மாண்புறு சமூகப் பணியாளனை வாழ்த்துகின்றோம்



**யாழ் எய்ட், கலிங்கம்**

NOOLAHAM FOUNDATION

இப்பொழுது 15,000 க்கும் அதிகமான ஆவணங்களுடன்

www.noolaham.org

இலங்கைத் தமிழ் இணைய எண்ணிம ஆவணக் காப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




KIRUBA LEARNERS

# KIRUBAA LEARNERS

Government Approved Driving Trainning School

# கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

**பெண் ஆசிரியரால் பெண்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.**

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விஷேட வீடியோ வகுப்பு நடைமுறை
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
- தவணைமுறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி
- இரவு நேர வாகனப் பயிற்சி 6.00p.m - 9.00p.m




**யாழ்ப்பாணம் :**

முதலாம் கட்டைச் சந்தி,
பருத்தித்துறை.
021 492 3201
071 454 6958

இல. 227/6, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம். (மதவடி அண்மையில்)
021 224 2022
071 454 6956

யாழ். கச்சேரியடி,
36, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 6699, 076 722 5292

கண்டி வீதி, சாவகச்சேரி.
(பேருந்து நிலையம் அண்மையில்)
021 492 3202, 021 227 0700

ஓம் பிளாசா, பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்
021 222 6688, 0772 422 622



**கிளிநொச்சி :**

A9 வீதி, கிளிநொச்சி,
(கச்சேரி முன்பாக)
021 228 5505
071 454 6955

வாடியடி சந்தி,
பூநகரி.
021 320 1818
071 454 6955

புளியடிச் சந்தி,
முல்லை வீதி, விசுவமடு.
021 320 1515
071 454 6955

நாச்சிக்குடா சந்தி,
மன்னார் வீதி, முழங்காவில்.
021 300 6544
071 454 6955

**மன்னார் :**

இல. 94, பிரதான வீதி,
மன்னார்.
071 988 7699
077 847 2732

**வவுனியா**

216, A9 வீதி, வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்)
021 222 7777, 071 454 6953

**தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 4353 / 021 492 3200 / 0777 225 292**


PRINT @ ANDRA PRINTERS 021 221 7279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org